www.ataaspirations.com

Sept - Oct - Nov 2012

வாசகர்களின் இதயத் துடிப்பு

# அலை ஓசை

இதழ் 7

**FREE ISSUE**





அலை
ஓசையின்
வாசகர்களுக்கு

## எமது இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

## இலவசம்

Lumala City இன்
சிறுவர்களுக்கான **சிறப்பு பரிசு**

## தற்கொலை ஒரு சமூகநோக்கு

பக்கம் 24


## காதலா நட்பா

பக்கம் 09

அருட்தந்தை
## டேமியன் அடிகளார் பதில்கள்

பக்கம் 32




அழகின் பாதி
ஆடையிலும் உண்டென்பது
இதற்காகத்தானா
Ram Bros
SINCE 1967
No: 140, Main Street,
Colombo 11, Sri Lanka.
Tel: 011 232 0127, 011 244 7698
Email: rambros@eureka.lk

## காலமும் நேரமும் மனிதனுக்காக காத்திருப்பதில்லை.

ஒளி கண்டகலும் இருள்போல உள்ளங்கள் கொண்ட ஆணவமும் அகந்தையும் அகல ஞானமும் கருணையும் ஒளிவீச வாசகர்கள் அனைவருக்கும் அலைஓசையின் தீபத்திருநாளாம் தீபாவளி வாழ்த்துக்கள்!

விரைவில் உலகம் அழிந்துவிடலாம் என ஊகங்கள் வந்தவண்ணமிருக்கின்றன. இறப்பும், பிறப்பும் எம்மால் நிர்ணயிக்கப்பட்ட ஒன்றல்ல. நமது வாழ்நாட்களில் காலத்தின் பெறுமதியை உணர்ந்து அதனை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். உலகம் தானாக அழிவதில்லை. நாம்தான் அதனை அழித்துக் கொண்டிருக்கிறோம். நாளை நமக்கு இறப்பு வந்துவிடுமோ என அச்சங் கொண்டிருப்போமாயின் இன்று நாம் செய்யவேண்டிய காரியங்கள் அனைத்தும் இறந்து போய் விடும். வாழ்வது சிறிது காலமானாலும் அக்காலத்தில் நாம் என்ன சாதித்தோம் என்பதுதான் முக்கியம். அடுத்தவர் என்ன செய்கிறார்? அடுத்த வீட்டில் என்ன நடக்கிறது என்றிருக்காமல் நாம் செய்ய வேண்டியதைச் சரியாகச் சரியான நேரத்தில் செய்ய வேண்டும். உலகின் முடிவு பற்றி விஞ்ஞானமும் சமயங்களும் ஞானிகளும் பல்வேறு கருத்துக்களைக் கூறிக் கொண்டிருந்தாலும் ஒன்று மட்டும் கூற விரும்புகிறேன். நாம் செய்யும் நல்ல காரியங்கள் தான் நமது வாழ்க்கையின் அளவுகோல். எனவே வாழ்க்கையை உரியமுறையில் பயன்படுத்தக் கற்றுக் கொள்ளுங்கள்.

அலைஓசை ஊடாக பல்வேறு மட்டத்தினருக்கும் ஏற்றவகையில் பல்வேறு கருத்துக்களை நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். இதனை வாசித்து விட்டு ஓரமாக வைத்துவிடாமல் உங்களுக்கு அக்கருத்துக்கள் சரியெனப்பட்டால் கடைப்பிடிக்க மறந்துவிடாதீர்கள்.

அலைஓசை விளம்பர நோக்கம் கொண்ட ஒரு சஞ்சிகை அல்ல என்பதை நாம் மீண்டும் மீண்டும் எமது வாசகர்களுக்கு அறியத் தந்துள்ளோம். ஆனால் இச்சஞ்சிகை இலவசமாக அச்சுருப் பெறவில்லை என்பதும் நீங்கள் அறிந்ததே. எனவே வர்த்தக நிறுவனங்களின் விளம்பரங்கள் மூலமான பங்களிப்பு இச் சஞ்சிகை தொடர்ந்தும் இலவசமாக கிடைக்க வழி செய்யும்.

வாசக நெஞ்சங்களின் அரிய ஆக்கங்கள் எமது அலைஓசையை அலங்கரிப்பதையே நாமும் தொடர்ந்தும் விரும்புகிறோம். எனவே உங்களால் முடிந்ததை உடன் செய்யுங்கள். ஏனெனில் காலமும் நேரமும் எமக்காகக் காத்திருப்பதில்லை.


உங்கள் விளம்பரங்களும்

அலை ஓசை

சஞ்சிகையில்

இடம்பெற விரும்பின்

தொடர்பு கொள்ளுங்கள்

**ATA Aspirations (Pvt.) Ltd.**

No. 122/B, Galle Road, Dehiwala South, Colombo, Sri Lanka.
Tel: 011 272 2990, 011 720 7989 Hotline: 077 687 4576
Email: info@ataaspirations.com Web: www.ataaspirations.com


### அலை ஓசையின் கடந்த இதழ்கள்




இதழ் 01




இதழ் 02




இதழ் 03




இதழ் 04




இதழ் 05




இதழ் 06

# பெண்ணைப்பற்றி உளவியல் ஆய்வாளர்களின் கண்டுபிடிப்புக்கள்



அழகில் சிறந்தவர்கள் ஆண்களா? பெண்களா? தாம்பத்திய ஆசை யாருக்கு அதிகம்? பெண்கள் எந்த விஷயத்தில் சிறப்பாக செயல்படுவார்கள்? ஆண்கள் எந்த விஷயத்தில் கோட்டை விடுகிறார்கள்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை தெரிந்துகொள்ள ஆர்வமா?

பெண்கள் பலதிறன் கொண்டவர்கள் அவர்களால் ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளை பார்க்க முடியும். போனில் பேசிக் கொண்டே அலுவலக வேலையையும் கவனம் சிதறாமல் செய்துவிடக் கூடியவர்கள் பெண்கள்.

அதற்கேற்ப அவர்களின் மூளையும் வடிவமைந்துள்ளது. ஆனால் ஆண்களால் இப்படி ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்ய முடியாது. ஆண்கள் பொய் பேசினால் பெண்கள் உடனே கண்டுபிடித்து விடுவார்கள் ஆண்களின் முகபாவனை, அவர்களது அசைவுகள் வார்த்தை உச்சரிப்பு இவற்றை வைத்தே அதைக் கண்டுபிடிக்கிறார்கள். ஆண்களால் இப்படி கண்டுபிடிக்க முடிவதில்லை. அதனால்தான் அவள் என்னை ஏமாற்றிவிட்டாள் என்று தாடி வைத்துக் கொண்டு புலம்பித் திரிகிறார்கள். குழப்பமான நேரங்களில் ஆண்கள் தனியாக உட்கார்ந்து வானத்தைப்பார்த்து யோசித்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் பெண்கள் பிரச்சனைகளை மனதில் போட்டு குழப்பிக்கொள்ளாமல் அன்புக்குரியவர்களிடம் சொல்லிவிட்டு மறந்துவிடுவார்கள்.

ஆண்களுடைய சிந்தனை செயற்பாடு எல்லாம் மதிப்பு, வெற்றி, தீர்வு பற்றியே இருக்கும். சுயநலவாதிகள், ஆனால் பெண்களுடைய சிந்தனைகள் எல்லாம் குடும்பம், நண்பர்கள், உறவு பற்றியே இருக்கும் உறவுகளுக்குள் ஒரு பிரச்சனை என்றால் பெண்களால் அவர்களுடைய வேலையில் கவனத்தை செலுத்த முடியாது. ஆண்கள் அப்படியில்லை.

ஒரு ஆண் சந்தோஷமாக இருக்க நல்ல வேலை வேண்டும். கூடுதலாக சந்தோஷமாக இருக்க மது, மாது ஏதாவது ஒன்று வேண்டும். ஆனால் பெண்களுக்கு நல்ல கணவர், நல்ல உறவு, நல்ல உறவினர்கள், நல்ல பொழுதுபோக்கு, நல்ல சந்தோஷம் இப்படி எல்லாமே நல்லதாக இருந்தால் மட்டுமே அவர்கள் திருப்தி அடைவார்கள்.


பெண்கள் எதையும் சுற்றி வளைத்துதான் பேசுவார்கள். ஆசைகளையும் ஒளிவுமறைவாக வெளிப்படுத்துவார்கள். ஆண்கள் Open Type நல்லதோ கெட்டதோ விஷயத்தை நேராக போட்டு உடைத்துவிடுவார்கள். ஆசையையும் கொட்டித் தீர்த்து விடுவார்கள்.

பெண்கள் எதையும் யோசிக்காமல் பேசிக் கொண்டே இருப்பார்கள். ஆனால் ஆண்கள் எதையும் யோசிக்காமல் செய்வார்கள். சில ஆண்களும் பெண்களும் இதில் உள்ள எல்லா விஷயங்களுக்கும் விதி விலக்கானவர்களாகவும் இருப்பார்கள்.

நீரோடைக்கும் பாறைக்கும்
இடையே நடக்கும்
இடைவிடாத போராட்டத்தின்
இறுதியில்
நீரோடை வெற்றி பெறுகிறது
தனது பலத்தினால் அல்ல,
தொடர் முயற்சியினால்

கடந்ததை நினைத்து கலங்காமல்
கடக்கப்போவதை நினைத்து
கடமையாற்றுவோம்.

www.ataaspirations.com



# போதிதர்மன்

## வாழ்க்கை வரலாறு

போதி தர்மன் .. தமிழ் சினிமாக்காரர்கள் மற்றும் ரசி-கர்கள் இணையத்தில் அதிகமாகத் தேடிக் கொண்டிருக்கும் பெயர் இன்றைக்கு இதுதான்!

காரணம், சூர்யா நடிக்கும் ஏழாம் அறிவு படத்தில் கதையின் நாயகன் இந்த போதி தர்மன்தான்!

# வரலாறு உங்கள் பார்வைக்கு

பல்லவர்கள் காலத்தில், தென் இந்தியாவில் பிற நாடுகளுடனான வர்த்தகம் சிறப்பாக இருந்தது சீன யாத்ரிகரான யுவாங் சுவான், பல்லவர்களின் ஆட்சி காலத்தில் தான் தென் இந்தியாவில் பயணம் மேற்கொண்டார். பல்லவர்கள் காலத்தில்தான் தென்னிந்தியாவில் புத்த மதமும் தழைத்தோங்கியது.

காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த பல்லவ மன்னனான கந்தவர்மனுக்கு நந்திவர்மன், குமாரவிஷ்ணு பௌத்தவர்மப் பல்லவன் ஆகிய மகன்கள் மூன்றாவதாகப் பிறந்த குழந்தைதான் போதிதர்மர். இவரின் இயற் பெயர் புத்த வர்மன்.

அக்காலத்தில் பல்லவ வம்சத்தில் பிறந்த கடைசிக் குழந்தையை புத்த மதத்திற்கு அர்ப்பணிப்பது மரபு. எனவே பல்லவ மன்னன் கந்தவர்மன் தனது மகன் போதிதர்மனை குருகுல வாழ்க்கைக்காக, காஞ்சிபுரத்தில் தங்கி பௌத்த சிந்தனைகளைப் பரப்பி வந்த பிரஜ் என்கிற சமய குருவிடம் சேர்த்திருக்கிறார்கள். காலப்போக்கில் போதி தர்மன் காஞ்சிபுரத்திலிருந்தபடியே பல கலைகளைக் கற்றுக் தேர்கிறார். இதில் களரி, வர்மம் போன்ற அதிரடிக் கலைகளும் உண்டு. போதியின் அபார ஞானத்தைப் பார்த்துபிரமித்த பிரஜ், தனக்கு அடுத்த வாரிகாக 28 வது குருவாக போதியை நியமிக்கிறார். புத்த மத குருவாக மாறியபிறகு, போதி, கி.பி. 475-550 கால கட்டத்தில் காஞ்சிபுரத்தில் இருந்து நாலந்தா சென்று அங்கிருந்து தெற்கு சீனாவிற்குச் செல்கிறார்.

இந்த காலகட்டத்தல் போதி தருமரின் மூத்த சகோதரரும் அதன் பிறகு அவர் மகனும் மன்னராக ஆகி இருந்தனர். மன்னனான போதி தருமரின் மூத்த சகோதரனின் மகன், தன்னுடைய சித்தப்பாவான போதி தர்மர் மீது அதிக பாசம் கொண்டிருந்தான். எனவே அவர் சீன மக்களிடம் போதி தருமரை பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டும். என தூது அனுப்பினார்.

மேலும் அன்றைய சீனப் பேரரசராக இருந்தவர் லியாங் வு டீ. புத்த மதத்தில் கொண்ட ஈடுபாட்டால் பௌத்த ஆலயங்களையும் விகாரைகளையும் நிறுவிய சீனப் பேரரசர். தமிழகத்திலிருந்து வந்த புத்தத்துறவியான போதி தர்மரை கேள்விப்பட்டு மிகுந்த மரியாதையோடும், அன்போடும் உபசரித்து சீனாவில் தங்கிவிட வேண்டுகிறார். Shaoshi என்ற மலையின் அடிவாரத்தில் உள்ள நிலத்தை அவருக்கு கொடுத்தார்.

போதி தர்மர் அந்த நிலத்தில் Shaolin கோவிலை நிறுவினார். அங்கு சுமார் 32 ஆண்டுகள் தங்கி பௌத்த மதத்தைப் பரப்பிய போதி தர்மர், தமிழகத்தில் தான் கற்ற கலைகளையும் சீனர்களுக்குப் பயிற்றுவித்தார். அப்படி போதிதர்மர் கற்றுக் கொடுத்த கலைகளில் ஒன்றுதான் குங்ஃபூ.

இதற்காக கல்வெட்டு அந்த சீனக் கோயிலில் இன்றும் உள்ளது.

போதி தர்மர் வாழ்ந்த அந்த ஷாஓலின் கோயிலை இன்றைக்கும் சீனர்கள் வணங்கி வருகிறார்கள் அந்தக் கோயிலில் உள்ள கல்வெட்டில் தென் இந்தியாவிலிருந்து வந்த போதி தர்மர் கற்றுத் தந்த கலை குங்ஃபூ என்று குறிக்கப்பட்டுள்ளது. அவரை சீன மக்கள் போ-ட்டி-தாமா என்றுதான் செல்லமாக அழைக்கின்றனர்.

பின்னர் அந்த இடத்திலிருந்து போதி தர்மர் சீனாவின் Guangdong வந்தாடைந்தார். அங்கு அவர் DA MAO என்று அழைக்கப்பட்டார். DA SHEN என்ற மஹாயான புத்த மதத்தை பரப்புவதற்கு DA MAO சீனா வந்துள்ளார். என்பதை அறிந்த மக்கள், அவருடைய



செற்பொழிவை கேட்க ஆசைப்பட்டனர். ஆனால் DA MAO என்ற போதி தர்மர் பலமணி நேரம் தியானத்தில் இருந்துவிட்டு யாரிடமும் எதுவும் பேசாமல் சென்றுவிடுவார். ஆனால் அவருடைய செயல்கள் மக்கள் மத்தில் ஒருவித அதிர்வை மட்டும் ஏற்படுத்தி இருந்தது. அங்கே மகாயான புத்த வம்சத்தைப் பரப்பியதாகவும், 150 ஆண்டுகள் அங்கே உயிரோடு இருந்ததாகவும் சீன வரலாறு கூறுகிறது.

புத்த மதத்தில் உள்ள 28 குருக்களின் குரு போதிதர்மர் என்ற இந்த தமிழன்தான் என்பதை பல வரலாற்று ஆசிரியர்களும் உறுதிப்படுத்தியுள்ளனர். செயற்கரிய பல செயல்களைச் செய்து ஆச்சரியத்தில் மூழ்கடித்தவாராம் இந்த போதி தர்மர்.

அதுமட்டுமல்ல, அவர் கால் தடம்பதியாத நாடுகளே இல்லையாம். இதை அவரது குறிப்பிலிருந்தே தெரிந்து கொள்ள முடிகிறது. கடல்ழியாக இந்தோனேஷியா, ஜாவா, சுமத்ரா உள்ளிட்ட தென்கிழக்கு ஆசிய நாடுகள் முழுவதிலும் போதி தர்மன் மகாயானத்தைப் பரப்பியுள்ளார்.

போதிதர்மர் சீனாவில் இருந்த காலத்தில் புத்தபிக்குகள் பிச்சை எடுத்துக்கொண்டு பலவீனமானவர்களாகவும் சமுதாயத்திற்கே பாரமாகவும் இருந்தார்கள். மற்றவர்களால் துன்புறுத்தப்பட்டுக்கொண்டு பயந்தே வாழ்ந்தார்கள். ஆனால் போதிதர்மர் தம்முடைய சீடர்களுக்கு மூச்சுப்பயிற்சியின் சில நுணுக்கங்களைச் சொல்லிக்கொடுத்தார். அந்தப் பயிற்சியின் மூலம் மனதின் இயக்கத்தையும் உடலின் செயல்பாட்டையும் அடக்கமுடியும்.

இன்னொரு பயிற்சியின்மூலம் உடலை வலுவாக்கி அசுரபலத்தைப் பெறமுடியும். மனதை தீட்சண்யமாகச் செயல்படுத்த முடியும். உடற்பயிற்சிகளையும் சொல்லிக்கொடுத்தார். அத்துடன் அரிய நுட்பக்கலையான வர்ம சாஸ்திரத்தையும் சொல்லிக்கொடுத்தார்.

அவர்களுக்கு விவசாயம், சிறுதொழில்கள் போன்றவற்றைச் செய்யச் சொல்லிக் கொடுத்தார். தங்களது கோயில்களைச் சுற்றிலும் தங்களுக்குத் தேவையான உணவை அவர்களே விளைவித்துக்கொண்டார்கள். சமுதாயத்திடம் பிச்சையெடுப்பதில்லை. உடல் உறுதி அசுரபலம் ஆகியவற்றைக்கொண்டு சில தற்காப்பு முறைகளையும், தாக்குதல் முறைகளையும், ஆயுதங்களிலிருந்து கற்றுக்கொடுத்தார். பிற்காலத்தில் புத்தபிக்குகள், சமுதாயத்தின் உழைப்பின் பலக்கைகளையெல்லாம் பிடுங்கிக் பலன்களையும் பிடுங்கித்தின்றுவிடுகிறார்கள் என்ற ஆத்திரத்திரத்தோடு சீனச்சக்கரவர்த்திகள் சிலர், பிக்குகளை அடித்துக் கொல்வித்தபோது போதிதர்மரின் சீடபரம்பரையும் போதிதர்மர் தோற்றுவித்த ஷாஓலின் (Shaolin) பௌத்தக்கோயில்களும் மட்டும் தப்பின.

சீனத்தில் மகாயான புத்த வம்சத்தைப் பரப்பியதாகவும், 150 ஆண்டுகள் அங்கே உயிரோடு இருந்ததாகவும் சீன வரலாறு கூறுகிறது. அரசன் நம்பிக்கொண்டிருந்தபோது, போதியோ உயிருடன் பாமீர் முடிச்சு பிரதேசத்தில் ஒற்றை காலணியை சுமந்தபடி நடந்து சென்றுகொண்டிருந்ததை சீன அமைச்சர் நேரில் கண்டாராம். அவரிடம் விசாரித்த போதி அவர் மீண்டும் உயிர்த்து எழுந்துவிட்டதை, ஷாஓலின் கோயிலின் குருக்கள் உறுதி செய்தார்களாம்.

## போதிதர்மர் கதைகள்

போதிதர்மர் என்பவர் புத்தரின் பிரதான சீடர். ப்ரக்யதாரா என்கிற பெண் துறவியின் உத்தரவுப்படி, இவர் சீன தேசத்துக்குச் சென்றார்.

அவர் சீத்தை அடைந்ததும், சக்கரவர்த்தி, வூ என்பவர் அவரை வரவேற்று உபசரித்தான்.

போதிதர்மரைக் கண்டு அவன் திகைத்து விட்டான். அவர் ரொம்பவும் கொடூரமானவராகக் காணப்பட்டார். அவருடைய பெரிய கண்களில் குரூரம் இருப்பதாக அவன் நினைத்தான்.

தன்னைப்பற்றி மிக உயர்வாக எண்ணிக் கொள்பவன் வூ அரசன். அதற்குக் காரணம் இருந்தது. அவனைச் சுற்றியிருந்தவர்களெல்லாம், தாங்கள் கடவுளைப் போன்றவர், என்று புகழ்ந்து தள்ளிக் கொண்டிருந்ததுதான்.

ஒரு நாள் அரசன் வூ போதிதர்மரை பார்த்து நான் மடாலயங்கள் பலவற்றைக் கட்டியிருக்கிறேன். அயிரக்கணக்கான அறிஞர்களுக்கு உணவு அளித்திருக்கிறேன். புத்தரின் கருத்துக்களை ஆராய்வதற்காக, ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவியிருக்கிறேன். புத்தரின் சேவைக்காகவே என்னுடைய அரசும், கருவூலமும் இருக்கின்றன. இதற்கெல்லாம் வெகுமதியாக எனக்கு என்ன கிடைக்கும்? என்று கேட்டான்.

35 ஆம் பக்கம் பார்க்க....



# Bermuda Triangle
# பெர்முடா
## ஒரு மர்மமுக்கோணம்

அட்லாண்டிக் கடல் பகுதியில் மியாமி (வடபுளோரிடா), ப்யூர்ட்டோரிகோ தீவு,பெர்முடா இவற்றின் மும் முனைகளை இணைக்கும் ஒரு கற்பனை முக்கோண பகுதி பெர்முடா முக்கோணம் (சாத்தானின் முக்கோணம்) என அழைக்கப்படுகிறது. அட்லாண்டிக் கடலில் 5 லட்சம் சதுர மைல் பரப்பு கொண்டது இப்பகுதி

இப்பகுதிக்குள் சென்ற அனேக கப்பல்கள், விமானங்கள், மனிதர்களுடன் எவ்வித தடயமும் இல்லாமல் மர்மமான முறையில் காணாமல் போயின.


எதிர்பாராத நிகழ்வுகள் இப்பகுதிக்குள் நிகழ்ந்ததால் தாம் நுழையாமல் வேறு வழியாக திரும்பி விட்டதாக மாலுமி கிறிஷ்டோபர் கொலம்பஹஸ் தம் அனுபவத்தில் தெரிவித்துள்ளார். மேலும் நாட்டியமாடும் பயமுறுத்தும் வெளிச்சங்கள் உள்ள பகுதி என்றும், தீப்பிளம்பு கொண்ட வானம், பித்துபிடிக்கும் Compass எனவும் இப்பகுதியை வர்ணித்துள்ளார்.

அனேக பத்திரிகையாளர்கள் கடல் ஆராய்ச்சியாளர்கள் பெர்முடா முக்கோணம் பற்றியும் இதன் மர்மம் பற்றியும் 500 ஆண்டுகளாக கதை கதையாக எழுதியுள்ளார்கள். புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. 1950 முதல் 1975 வரை மட்டும் சிறிதும் பெரிதுமாய் 428 கப்பல்கள் மாயமாய் மறைந்துள்ளன.

பல்வேறுவிதமான அனுமானங்களும் ஆராய்ச்சிகளும் விடை தெரியாமல் தொடர்ந்து நடந்து வருகின்றன. அவற்றில் சில:

கடலினுள் மூழ்கிப்போன அட்லாண்டிஸ்:

ஆர்கியாலஜிஸ்ட் (Edgar Cayce 1968) எட்கர் கெயிஸ் கடலில் மூழ்கி அழிந்துபோன அட்லாண்டிஸ் நிலப்பரப்பின் மலை முகடு பெரிய சுவர் போல பைமினிக்கு அருகில் அதாவது பெர்முடா முக்கோணப் பகுதிக்குள் இருப்பதாக கண்டுபிடித்தார். பாகாமாஸில் மேலும் பல தடயங்கள் அழிந்து போன அட்லாண்டிஸ் நகரத்தை பற்றி கூறுகிறது. அட்லாண்டிஸ் நகரத்தில் இருந்தவர்கள் மேலான அறிவு மிக்கவர்கள் அவர்களிடம் சக்தி மிக்க கிரிஸ்டல் இருந்ததாகவும், இன்னும் இவை தான் சக்தி அலைகளை பரப்பிக் கொண்டிருப்பதாகவும் இதன் காரணமாகவே Area 15 எனும் இப்பகுதிக்குள் நுழையும் எவையும் (விமானம், கப்பல்கள்) எவ்வித சுவடும் இன்றி மறைந்து விடுவதாக நம்பப்பட்டது.





இப்பகுதி ஏலியன்ஸ் வந்து போகும் தளமாக செயற்படுவதாகவும் இங்கு எப்போதும் கண்ணுக்கு தெரியாத அதிக டிராபிக் இருப்பதாகவும் இப்பகுதியில் கடந்த நூற்றாண்டில் மட்டும் 50 கப்பல்கள் 20 விமானங்கள் காணாமல் போனதா கவும் 1000 பேர் கடந்த 500 ஆண்டுகளில் தொலைந்து போனதாகவும் U.S. Navy மற்றும் கடலோர பாதுகாப்பாளர்கள் கூறுகிறார்கள். இந்த பகுதியில் ஒரு நீல நிற பெருஞ் சுழற்குழிகள் சுற்றிக்கொண்டிருப்பதாகவும் தெரிவித்தனர். தற்போதைய ஆராய்ச்சியாளர்கள் ராபமெக்கெரிகர், புரூஸ்கெனான் இதையே எலக்ட்ரானிக் சுழல் மேகங்கள் (Electronics Fog) என சொல்கின்றனர்.

1945 ஃப்லைட் 19 எனும் போர்விமானம் வழக்கமான பயிற்சியில் இருக்கும் போது இப்பகுதியில் காணாமல் போய்விட்டது அதில் 19பேர் இருந்ததாகவும் இதை தேடி சென்ற 14 பேர் அடங்கிய குழு 5 டார்பிடோக்களும் அதே பாணியில் மறைந்து விட்டதாகவும் ஒரு தகவல் இருக்கிறது. மேலும் இந்த விமானங்கள் செவ்வாய் கிரகத்திற்கு வேற்று கிரக வாசிகளால் கடத்தப்பட்டிருக்கலாம் என்ற கற்பனையும் உலவுகிறது.

இப்பெரிய பரப்பில் நீர்மேல் பரப்புக்களிலும் வானப்பகுதிகளிலும் மீதேன் வாயுக்கள் அடர்த்தி அதிகமாக இருப்பதால் நீர் பரப்பை மிக லேசாக்கி இதனுள் செல்லும் கப்பல்களை மூழ்கடித்திருக்கும் எனவும் சொல்லப்படுகிறது. இதற்கான ஆதாரமும் இல்லாமையால் இக்கூற்றும் மறுக்கப்படுகிறது.

இப்பகுதியில் திசைமானிகள் ஒழுங்கான திசை காட்டுவதில்லை. சில இடங்களில் கர கரவென சுழலுவதாக கூறுகிறார்கள்.


38 ஆம் பக்கம் பார்க்க....




**Imported Shoes for Ladies & Gents from Bangkok & China**

No: 160, Galle Road, Dehiwala. Tel : 011 273 8837 Hotline: 071 901 0964

# E.S.P. உண்மையா?



அதீத உள்ளுணர்வுத் திறன், கூடுதல் புலனறிவு, என்றெல்லாம் அழைக்கப்படும் E.S.P உலகெங்கிலுமுள்ள மனிதர்கள் பலருக்கும் வியப்பைத் தரும் ஒன்று (Extra Sensory Perception) என்பது உண்மைதானா? இல்லை, மனிதர்களின் அதீத கற்பனைகளின் விளைவா?

பின்னர் வருவதை, அல்லது நடக்கப் போகும் ஒன்றை முன் கூட்டியே அறிவதுதான் ஈ.எஸ்.பி எனப்படுகிறது பொதுவாக, ஈ.எஸ்.பி ஆற்றல்கள் எல்லா மனிதருக்குமே ஓரளவு இருக்கிறது. ஆனால் பலரும் அந்த ஆற்றலின் மீது கவனம் செலுத்துவதில்லை. அல்லது அந்த திறனை வளர்த்துக்கொள்வதில்லை. அதனால் பலரும் அது பற்றிய உண்மைகளை அறியாமல் உள்ளனர். உதாரணமாக திடீரென நாம் நெருங்கிய நண்பர் ஒருவரைப்பற்றி அடிக்கடி நினைப்போம். அவரைப் பார்க்க வேண்டுமென நினைப்போம். திடீரென அவர் கண் முன்னே வந்து நிற்பார். இதுதான் ஈ.எஸ்.பி. என்பதன் ஒருவித எளிமையான விளக்கம். இந்த ஈ.எஸ்.பி. யில் பல வகைகள் உள்ளன.

பிறருடைய எண்ணங்களை, அவர்கள் மனதில் உள்ள தகவல்களைப் படிக்கும் ஆற்றல் - டெலிபதி (Telepathy) எனப்படுகிறது.

எதிர்காலத்தை அவதானித்து, மிகச் சரியாக அதை முன்கூட்டியே கூற முடிவதற்கு Precognition என்று பெயர்.

இந்த இடத்தில் இருந்து கொண்டு வேறு ஒரு இடத்தில் நடக்கும் விஷயங்களை சரியாகக் கணித்துக் கூறுவதற்கு - Clairvoyance என்று பெயர்.

ஒரு நபரது கடந்த காலத்தை, சம்பவங்களை, வாழ்க்கை நிகழ்ச்சிகளை நேரில் பார்த்தது போல் மிகத் துல்லியமாகக் கூறுவதற்கு Retro Cognition என்று பெயர்.

இதில் முக்கியமான விஷயம் ஈ.எஸ்.பி என்பது அமானுஷ்ய ஆற்றலோ அல்லது ஆவிகள் போன்றவற்றின் உதவியால் செயல்படுத்தப்படுவதோ இல்லை. முழுக்க முழுக்க மூளை மற்றும் மனதின் செயல்பாடுகளால் ஏற்படும் அதீத திறனே ஈ.எஸ்.பி. அதே சமயம் விஞ்ஞானிகளால் இது எப்படிச் செயல்படுகிறது. ஏன் ஒரு சிலருக்கு மட்டும் இந்த ஆற்றல்கள் அதிகமாக இருக்கிறது என்பதைக் கண்டறிய முடியவில்லை. இதை அவர்கள் நம்பினாலும் விஞ்ஞானபூர்வமாக ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் Para-Psychology மற்றும் Para Normal என்ற வகையில் இதனை உள்ளடக்கி ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்.



பண்டைய புராணங்களில் ஈ.எஸ்.பி. பற்றிய பல தகவல்கள் காணக் கிடைக்கிறன்றன. மகாபாரதத்தில், குருக்ஷேத்திரப் போர் நடக்கும் காலத்தில், அரண்மனையில் இருந்து கொண்டே, பார்வையற்ற மன்னன் திருதராஷ்டிரனுகு அந்தப் போர் களத்தில் நடக்கும் காட்சிகளை சஞ்சயன் விவரித்தது Clairvoyance எனப்படும் இந்த ஈ.எஸ்.பி. ஆற்றலைக் கொண்டுதான்.

ஆதிசங்கரர் சன்யாசம் ஏற்கும் தறுவாயில் அன்னை ஆர்யாம்பாள், தனது அந்திமக்காலத்தில் அவர் அருகில் இருக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்ள, சங்கரரும் அதற்குச் சம்மதிக்க, பல் ஆண்டுகள் கழித்து ஆர்யாம்பாள் நோய் வாய்ப்பட்ட போது மகன் சங்கரரை நினைக்க, உடனே பல மைல் தொலைவில் தவம் செய்து கொண்டிருந்த போதும் சங்கரர் அன்னையின் அழைப்பை உணர்ந்து, இறுதித் தறுவாயில் உடன் இருப்பதற்காக விரைந்து வந்தார். இந்தத் தகவல் பரிமாற்றம் தான் டெலிபதி எனப்படுகிறது.

நாஸ்ட்ரடாமஸ் எதிர்காலத்தில் இந்த சமயத்தால், என்னென்ன சம்பவங்கள் நடக்கும் என்பதை கணித்துக் கூறியதும் ஒரு விதத்தில் Precognition எனப்படும் இந்த ஈ.எஸ்.பி. ஆற்றலின் உதவியோடுதான். ஒரு சில ஜோதிடர்கள் அல்லது ஆருடம் சொல்பவர்கள். தங்களைக் காண வரும் நபரின் கடந்த காலத்தை மிகத் துல்லியமாகவும், வாழ்க்கை நிகழ்ச்சிகளைத் தெளிவாகவும் கூறுவது Retrocognition என்ற ஈ.எஸ்.பி ஆற்றலால் தான்.

38 ஆம் பக்கம் பார்க்க....

# காதலா?? நட்பா??

அமைதியான அழகான அவசரமான காலை வேளை அவசர அவசரமாக இயங்கிக் கொண்டிருந்த பல்கலைக்கழகத்தில் இரு சோடிக்கண்கள் சந்தித்துக் கொண்டன. ஒரு கணம் இதயமே நின்றுவிடும் போலிருந்தது. மீண்டும் ஒருமுறை பார் என்றது மனம். ஆனால் Super Ego அதட்டியது 'no' என்றது. இதயமே கனமாகியது போன்றும் இலேசாகியதும் போன்றும் இரண்டும் கலந்த இனிய உணர்வு மீண்டும் எப்போது பார்ப்போம் என்று மனம் ஆவலினால் துள்ளியது. எதனையும் சரியாக கிரகிக்கவோ அடுத்ததாக என்ன செய்யவேண்டும் என்றோ தெரியாது மூளையின் கட்டளைப்படி இயங்கியது உடல், என்ன ஆச்சரியம் அதே கொள்ளை கொண்டவரை இவ்வளவு விரைவாக எமது lecture hall இலேயே சந்திப்போம் என்று நினைக்கவில்லையவள். இவ் உலகத்தில் மகிழ்ச்சியாக இருப்பவள் என்றால் அது நான்தான் என்று எண்ணியது மனம். எனக்கு என்ன ஆயிற்று எத்தனை நண்பர்களுடன் சகஜமாக பழகியிருப்பேன். பாடசாலை நாட்களில் பல போட்டிகளில் பல விடயங்களில் முன்னின்று பல காரியங்களை தனித்து சாதித்த எனக்கு என்ன ஆயிற்று மனம் ஆராய்ச்சியில் இறங்கியது. யார் இவர்? இவர் பழக்கவழக்கம் என்ன? இவர் குணாதிசயம் என்ன? என்று தெரியாமலே என் இதயத்தினை தொலைத்துவிட்டேன். இது சரியா?





இதுதான் காதல்

யாரும் குழம்பவேண்டாம். குழப்பவேண்டாம். இதென்ன கண்டதும் காதல் என்கிறீர்களா? ஆம் அதுதான் உண்மை. இலக்கியக் காதலாக இருந்தாலும் சரி சங்க காலக் காதல்கள் கூட கண்டதும் தொடங்கும் காதலையே பரிந்துரைக்கின்றன. கண்களில் தொடங்கி இதயம் நுழைந்து கொள்ளை கொண்ட சுகமான சுமையே காதல். இதில் கடவுளின் கருணையும் உண்டு என்றுதான் சொல்லவேண்டும். கண்டதும் காதலானது இருவர் குணாதிசயம் அவர்களது பின்புலம் தெரியாமல் வரினும் அந்த சிக்கலான முடிச்சினைக்கூட சரியாக அவிழ்க்கக்கூடிய வகையிலேயே இறைவன் முற்கூட்டியே தனது கிருபையினால் படைத்திருக்கிறான். இறுதியாக இலக்கியங்கள், சங்ககாலங்கள்,புராணக்கதைகளில் எல்லாம் இருவர் ஒருவரை ஒருவர் முதன்முதல் சந்திக்கும் போது அவர்களிருவரிற்குள்ளும் ஏற்படும் ஓர் இரசாயன மாற்றத்தையே காதல் என்கின்றனர்.

இதில் இரகசியம் ஒன்றும் உள்ளது. இந்தக் காதல் ஒருவருக்கு வாழ்க்கையில் ஒரு முறைதான் அதுவும் ஒருவர் மீது மட்டும் தான் வரும். காதல் என்னும் மலர் வாழ்க்கையில் ஒரு முறையே மலர்ந்து மணம் வீசும். அது பல முறை பலரில் வராது. ஆனால் இன்று?...... எம் சமூகத்தில் சங்ககாலக் காதல் சங்கமருவிய காலத்தில் சிதைந்தது போன்று பலரில் சிலர் சிதைந்துவிட்டனர்.

நட்பு ஒருவனது வாழ்க்கையில் குடும்பத்திற்கு அடுத்தபடியாக அவன் வாழ்க்கையில் துணை நிற்கும் பலம். இது பெண்கள் – பெண்கள், ஆண்கள் – ஆண்கள், பெண்கள் – ஆண்கள் என்று வயது வித்தியாசம் இன்றி வரும். ஒன்று இது பொதுவாக நல்ல நண்பனோ நண்பியோ கிடைப்பவன் அதிஷ்டசாலி. அதிலும் அந்த நண்பனோ நண்பியோ வாழ்க்கைக் கடைசி வரை நிலைப்பவன் பாக்கியசாலி. இந்த நட்பு வட்டத்தில் இணைபவர்களில் சிலர் நட்புக்கும் காதலுக்கும் வித்தியாசம் புரியாது தவிக்கின்றனர். ஓர் நண்பனும் நண்பியும் சேர்ந்து பழகினாலேயே சமூகம் அவர்களை காதலர்களாகவே பார்க்கின்றது. ஏன் சமூகம் என்று சொல்வான் இவர்கள் இருவரில் ஒருவர் மனம் நான் இவரைக் காதலிக்கின்றேன் போலிருக்கின்றதே என்ற அவஸ்தையில் சங்கடப்பட்டிருக்கின்றனர். இந்த எண்ணம் மற்றவரிற்கும் இருக்கின்றதா என்று அறியத் துடிக்கும். இது எமது சமுதாயத்தில் நாம் காணும் சில விடயங்கள் இது காதல் அல்ல இரு நண்பர்களும் தமது குணாதிசயம் பழக்க வழக்கம் ஒன்றுபட்டு போவதனால் அவர்களினை வாழ்க்கையில் இழக்க விரும்பாமல் திருமணத்தின் மூலம் தமது வாழ்க்கைத் துணையாக்க நினைக்கின்றனரே தவிர இரு நண்பர்களுக்குள் ஒருபோதும் காதல் மலர்வதில்லை. தம்முடன் ஒத்துப்போகக்கூடிய ஒருவரை வாழ்க்கைத் துணையாக்க முனையும் முயற்சி உண்மையில் ஓர் நண்பனும் நண்பியும் நல்ல நண்பர்களாக இருக்க முடியும் இந்த சமுதாயத்தில். சமுதாயம் அவர்களினை காதலர்களாகப் பார்த்தாலும் நல்ல நண்பர்கள் பழகும்போது அவர்கள் மனதில் காதல் உணர்வு வருவதில்லை. ஏன் தனது மனம் கொள்ளை கொண்டவரிடம் வரும் வெட்கம் கூட நல்ல நண்பனிடம் வருவதில்லையே!!! நல்ல நண்பன் மூலம் நண்பிக்கு வெட்கம், சங்கடம், சில கருத்தினை சொல்ல தயக்கம் கூட வருவதில்லை.

ஆனால் இந்த காதலோ காதல் கொண்டவர் முன்னிலையில் வெட்கம் சில விடயங்களினை சொல்லுவதற்கே அநியாயத்திற்கு வெட்கப்பட வேண்டியிருக்கின்றது. நல்ல காதலர்கள் நல்ல நண்பர்களாகவும் இருக்கலாம். ஆனால் நல்ல நண்பர்கள் காதலர்களாக முடியாது. திருத்தி அமைத்து நல்ல நண்பர்கள் தமக்குப் பிடித்த நண்பனையோ நண்பியையோ வாழ்க்கைத் துணையாக எடுக்க எடுக்கும் முயற்சி.

38 ஆம் பக்கம் பார்க்க....


# வர்மம்

## தமிழனின் தற்காப்புக் கலை





மனிதனின் உணர்வுகளில் வீரம் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. வரலாற்றின் பக்கங்களைப் புரட்டினால், ஒரு வம்சத்தின் வெற்றியையோ புகழையோ நிர்ணயிக்கும் அளவு கோலாக வீரம் விளங்கியிருப்பது தெரிய வரும். ஏனென்றால், ஆயிரமாயிரம் ஆண்டுகளாக மனிதனின் ஆற்றல் அவனுடைய உடலாற்றலை வைத்துத்தான் அளக்கப்பட்டது. உலகின் புகழ்வாய்ந்த இனங்கள் அனைத்தும் வீர சாகசங்களால் மட்டுமே அறியப்பட்டன. கோழைத்தனம் குடிபுகுந்த எந்த ஒரு வம்சமும் கொற்றம் அமைத்துக் கோலோச்சியதாக வரலாறு இல்லை. பகைவரிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் உணர்வோடு. உலகின் ஒவ்வோர் இனமும் வீர விளையாட்டுக்களுக்கான வியூகங்களை வகுத்துக் கொண்டன. ஐம்புலன்களையும் அடக்கி உடலையும் மனதையும் ஒரு கட்டுக்கோப்புக்குள் வைத்திருக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்த மனித இனங்கள், உயிர்காக்கும் தற்காப்புக்கலைகளையும் உருவாக்கி, அவற்றைப் பேணிடும் வகையில் பாசறைகள் அமைத்துப் பயிற்சிகள் மேற்கொண்டன. இதில் தமிழினமும் அடங்கும்.



வாளொடு முன்தோன்றி மூத்தக் குடி என்னும் செவ்விய கூற்று, தமிழ் இனத்தை ஒரு வீரப் பரம்பரையாகவும், தமிழ் மண்ணை ஒரு வீரத்தின் விளைநிலமாகவும் சித்தரிப்பதாகும். தற்காப்புக் கலையில் தமிழ் இனம் தழைத்தோங்கியிருக்கிறது என்பதற்குச் சங்க நூல்கள் தொட்டே தடயங்கள் கிடைக்கின்றன. முதுமரத்த முரண்களரி வரிமணல் என்ற பட்டினப்பாலைக் குறிப்பு ஒன்று, தமிழனின் போர்த்தொழில் வித்தைகள் பற்றிய குறிப்புக்கள் தருகின்றது. தொல்காப்பியம், பதிற்றுப் பத்து, புறப்பொருள் வெண்பாமாலை, திருமந்திரம் ஆகிய நூல்களிலும் தமிழனின் தற்காப்புக்கலை அங்கங்கள் விரித்துரைக்கப் பட்டிருக்கின்றன.

ஆனால், இந்தப் போர்த்தொழில் வித்தைகட்கெல்லாம் அப்பாற்பட்டு, தமிழினம் அறிந்துவைத்திருந்த வர்மம் என்னும் தர்மம், உலகில் வேறெந்த இனத்திடமும் காணப்படாத ஓர் அதிசயச் கலை என்பதை அறியும் போது, செந்தமிழ்ப் பரம்பரையின் ஒவ்வோர் உயிரும் செம்மாந்து நிற்கிறது. சித்தர் பெருமக்களின் செய்தவத்தால் நமக்குக் கிடைத்கப்பெற்ற இந்த வர்மக் கலை, யுகம் யுகமாக நம் மூதாதையர்கள் ஆய்ந்து ஆய்ந்து கண்டறிந்த உண்மைகளின் தொகுப்பாகும். தமிழனுக்குச் சொந்தமான இந்த அரிய கலையின் அற்புதப் பயன்பாடுகள் குறித்துத் தமிழர்களே பெருமளவில் அறியாதிருப்பதுதான் புரியாத புதிராக இருக்கிறது. இன்னொரு புறம், வர்மக்கலை நடைனுறைக்கு ஒவ்வாத பழங்கலை என்றெல்லாம் தமிழ் மக்களே கேலிபேசிக் கொண்டிருப்பது தாங்கொணாத வேதனையாக இருக்கிறது. அந்த வேதனைக்குக் கடுகளவேனும் விடிவுகாணும் முடிவுதான் இந்தக் கட்டுரையின் கருப்பொருள்.

வர்மத்தின் எண்ணிக்கைகள் வர்ம நாடிகளின் உட்பிரிவுகள், மாத்திரைகள், காலங்கள், ஈடுகள், அடங்கல்கள், இளக்குமுறைகள் இன்னோரன்ன விளக்கங்களையெல்லாம் யான் இங்கு விலாவாரியாக எழுதிடக் கருதவில்லை. மாறாக, வர்மக் கலையின்பால் தமிழனுக்கு உண்டாக வேண்டிய பெருமிதங்களையும் பெருங்கடமைகளையும் மட்டும் ஒரு படைப்பாளனின் பார்வையில் நின்றுகொண்டு அலசிட முற்படுகிறேன்.

சீனாவில் வேரூன்றியிருக்கும் குங்ஃபூ மட்டுல்ல, ஏனைய எல்லாத் தூரக்கிழக்கு நாடுகளின் தற்பாப்புக்கலைப் பிரிவுகளான ஜுடோ, கராத்தே, தேக்வாண்டோ ஆகியவற்றுக்கும் தாயாக இருப்பது தமிழனின் களரிதான் என்பதற்குச் சரித்திரம் எண்ணற்ற சாட்சியங்கள் வைத்திருக்கின்றது. இந்தந் சாட்சியங்கள் யாவும் மூத்த தமிழ்க்குடியின் புகழை முரசறைந்து நிற்கும் சாத்தியங்கள் என்பதில் சந்தேகம் இல்லை. வர்மத்தின் அதிசயங்கள்!!

வேறெந்த தற்காப்புக் கலைகளிலோ மருத்துவ உத்திகளிலோ இல்லாத அதிசயங்கள் வர்மத்தில் உண்டு, இங்கே சில உண்மைகளைச் சுருக்கமாகக் கோடிட்டுக் காட்ட விழைகிறேன்.

ஒளிவு பூட்டு, பிரிவு என்னும் மூன்று அடிமுறை உத்திகளும் தமிழனின் வர்மக்கலையில் இருப்பதுபோல் வேறெந்தத் தற்காப்புக் கலையிலும் இல்லை.

☐ வெட்டுக்காயங்களிலிருந்து பீறிடும் ரத்தத்தை எந்தக் கட்டும் போடாமலேயே வர்ம நரம்புப் பிடியால் கட்டுப்படுத்தி நிறுத்திவிட முடியும்

☐ ஜன்னி வாந்தி ஆகிய நோய்களை எந்தவித மருந்தும் இல்லாமலேயே வர்மக்கலையின் தடவுமுறைகளால் உடனடியாகச் சரிசெய்துவிட முடியும்.

☐ ஒற்றைத் தலைவலி என்னும் கொடிய நோயைக் கணைக்காலில் உள்ள வர்ம அடக்கல் கொண்டு நாலைந்து நிமிடங்களில் ஓட்டிவிடலாம்.

☐ நட்போடு கைகுலுக்குவது போலவோ, பாசத்தோடு கட்டியணைப்பது போலவோ நடித்துக்கொண்டு பகையாளியைப் பிணமாகக் கீழே வீழ்த்திவிட வர்மம் அறிந்தவனுக்கு முடியும்.

மேற்கூறிய உண்மைகளைச் சிலர் நம்ப மறுக்கலாம். நக்கல் புரியலாம். ஆனால் வர்மக் கலையின் அரிச்சுவடிகளையேனும் அறிய நேரிடுபவர்க்கு அங்ஙனம் மறுக்கவோ நகைக்கவோ இயலாது என்பது திண்ணம். வர்மத்தின் அதிசயங்களை அறிவார் மட்டுமே அறிவார் வர்மக்கலை ஆசிரியர் யார்? வர்ம மெனும் பொக்கிஷத்தின் வானளாவிய புகழ்பற்றிச் செருக்கும் செம்பமாப்பும் பூண்டிருக்கும் தமிழினம், அதன் ஆசிரியன் யார் என்பதற்குச் சரியான விடைதர இயலாமல் தலைநாணி நிற்கிறது. ஒப்பற்ற இக்கலைக்கென்று உலகளாவிய பொது நூல் ஒன்று நம் கையில் இல்லை என்பது உண்மையிலேயே வருத்தம் தருகிறது. வர்மத்தைப் பற்றி வலுவானதொரு இலக்கண நூல் வகுத்து உலக அரங்கிலே உலா வரவேண்டிய உன்னத நிலையைத் தமிழ் அன்னைக்கு நம் முன்னோர் தரவில்லையே என்ற துயர்மிகுந்த ஆதங்கம் நம்மைத் துளைத்தெடுக்கிறது.

அகத்திய முனிவன்தான் இதன் ஆசிரியன் என்கின்றன சில பண்டைய செவிவழிச் செய்திகள். அகத்திய முனிவன் வர்மசாஸ்திரத்தை சமஸ்கிருத்தில் மட்டுமே எழுதியதாக மலையாளக்காரர்கள் வேறு வாதிடுகின்றனர். இவ்விரண்டு ஆசிரியர்கள் பற்றிய கூற்றும் உறுதி செய்யப்படாத வெறும் யூகங்கள் என்பதால் இவற்றை மட்டும் வைத்துக் கொண்டு நாம் பெருமை தேடிக் கொள்ளவோ உலக அரங்கில் வீறுநடை போட்டுப் பறைசாற்றி நிற்கவோ மார்தட்டிப் பேசவோ நம்மால் இயலாமற் போகிறது.

வர்ம நூல்களின் வரிசைகள்! வேறு யார்தான் வர்மக்கலையின் ஆசிரியர்கள்? ஆளாளுக்கு நிறைய பாடல்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். அத்தனையும் விருத்த வடிவம் கொண்டவை. அவற்றுள்ளே நூற்றுக்கணக்கான சொற்பிழைகள். பொருள் முரண்பாடுகள். இடைச் செருகல்கள். இலக்கணத் தவறுகள். யாப்பிலக்கணச் சீர்கேடுகள். இலக்கணப்பிழையின்றி, இலக்கியத்தரம் குன்றாமல் எந்தவொரு வர்மநூலும் நம்மிடையே இல்லை. சித்தர்கள் மற்றும் முனிவர்கள் போர்வையில் பற்பலரும் அரைகுறை யாப்பிலக்கணத்தில் அடுக்கடுக்காய் எழுதி வைத்திருக்கும் இப்பாடல்கள் நமக்குப் பெருமை சேர்ப்பனவாக இல்லை பவணந்தியின் நன்னூல் போலவோ, திருமூலரின் திருமந்திரம் போலவோ செந்தமிழ் மணம் வீசிடும் செய்யுள் நூலாக எந்தவொரு வர்மநூலும் தமிழில் இல்லை.

வள்ளுவனையும் இளங்கோவையும் கம்பநாடனையும் காளமேகனையும் கைவசம் வைத்திருக்கும் நாம், வர்மநூலை எழுதியவனென்று பேர் சொல்லும்படியாக ஒரு பெரும்புலவனை அடையாளம் காட்ட முடியாத நிலையில் இருக்கிறோம் என்பது ஆற்றொணாத பெருங்குறை.

வர்ம சூத்திரம், வர்ம சூட்சுமம், வர்மப் பீரங்கி, வர்மக் கண்ணாடி என்று நமக்குக் கிடைத்துள்ள பலதரப்பட்ட வர்மநூல்களில் சில வர்மங்கள் ஒன்றுக்கொன்று முரணாக விளக்கப்பட்டிருப்பதும், சில வர்மங்கள் முற்றாக விடுபட்டிருப்பதும், சில இடங்களில் விருத்தங்கள் அரைகுறையாகவே காட்சியளிப்பதும். இந்த மாபெரும் கலைக்கு இழைக்கப்பட்டிருக்கும் களங்கம் என்றே கருதவேண்டியிருக்கிறது.

## வள்ளுவனும் வர்ம நூலும்!

வள்ளுவன் காலத்தில் கூட வர்மம் மாண்புற்று விளங்கியிருக்க வேண்டும். அதற்கான சான்றுகள் திருக்குறளிலேயே போதிய அளவுக்குக் கிடைக்கின்றன. நூல் என்ற சொல்லைக் கையாளுகின்ற பெரும்பாலான இடங்களிலெல்லாம் வள்ளுவன் வர்மமத்தையும் வைத்தியத்தையும் சுட்டிக் காட்டுவதாகத் தோன்றுகிறது. எதிலார் நூல் குறள் 440 என்றும் நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்று குறள் 440 என்றும் நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்று (குறள்: 941) என்றும் எழுதுகிற வள்ளுவன், வர்மக் கலையையும் வர்மக் கலையையும் வர்ம நாடிகளையும் நேரடியாகவே சுட்டிக்காட்டுகிறான் என்பது கூர்ந்து நோக்கத்தக்கது. நமது வர்மச் சுவடிகளில் கூட தரமான நூல் எவர்க்கும் வெளியிடாதே! என்றும் பொருள் வாங்கி நூலே ஈயே என்றும் நூல் தா என்று உன்னை ஏய்ப்பர்! என்றும் காணப்படுகின்ற வரிகளில் நூல் என்ற சொல் நேரடியாக வர்மக் கலையைச் சுட்டிக்காட்டத்தான் பயன்படுத்தப்படுகிறது. எனவே வள்ளுவனும் அதே பொருளில் நூல் என்ற சொல்லைத் கையாண்டிருப்பதில் எந்த வியப்பும் இல்லை. ஒரு வேளை வள்ளுவனே வர்மம் பற்றியும் ஓர் இலக்கியம் வடித்திருப்பானோ? நம் கைகளுக்கு அது கிடைக்காமற் போனதோ? யார் கண்டார்கள்!...
மொத்தத்தில் வர்மக்கலையின் சூத்திரதாரியாக வள்ளுவன் உட்பட எந்தப் புலவனையும் சொந்தம் கொண்டாட முடியாத சோக நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருப்பது உண்மை.

## தமிழ் இனம் செய்யவேண்டியது என்ன?

தமிழன் விழிக்க வேண்டும். வர்மக் கலையின் உன்னத சக்திகளை உலகுக்கு வெளிப்படுத்த வேண்டும். ஆற்றல் மிக்க ஆடல்மறவரும் ஆசான்மாரும் வர்மப் புலவோரும் ஒருங்குகூடி ஓர் உலகப் பொது வர்ம நூலை இலக்கண வளத்தோடும் இலக்கிய வனப்போடும் யாத்து, அதை அன்னைத் தமிழாள் மலரடிக்கு அர்ப்பணிக்க வேண்டும் அந்தக் கடமையினின்று தமிழன் தவறிட நேர்ந்தால், சரித்திரத்திலே தமிழ்ப் புலத்தின் வெற்றிச் செருக்கிற்கோர் சறுக்கல் விளைந்திடும் அபாயம் உண்டு.


# உதவிக்கரம் நீட்டுங்கள்

நல்லவர்கள் தமது நற்பணிகளைத் தொடரும் வரை இவ்வுலகில் கைவிடப்பட்டவர்களோ கஷ்டப்பட்டவர்களோ இருக்கமுடியாது. நம்மால் முடிந்த உதவிகளை நம் உதவி தேவைப்படும் மற்றவர்களுக்கு செய்யும்போது ஏற்படும் உள்ளுணர்வை உணரப்பட மட்டுமே முடியும்.

உங்களின் உதவி தேவைப்படும் நேரம் இது. உங்களால் முடிந்ததை செய்யுங்கள்.

தொடர்புகளுக்கு
அஞ்சலியகம்
021 3217262




**இரண்டாம்** உலகப்போர் மூள்வதற்கும் அதன்மூலம் 20 கோடிப் பேருக்கு மேல் மரணமடைவதற்கும் காரணமாக இருந்த ஜேர்மனிய சர்வாதிகாரி ஹிட்லரின் வாழ்க்கை பல திருப்பங்களும் திடுக்கிடும் சம்பவங்களும் நிறைந்ததாகும்.



# சர்வாதிகாரி ஹிட்லர்



ஹிட்லர் வட ஆஸ்திரியாவில் உள்ள பிரானோ என்ற ஊரில் 1889 ஆம் ஆண்டு ஏப்ரல் 20 ஆம் திகதி பிறந்தார். இவருடைய தந்தையின் பெயர் அலாயிஸ் சிக்கில் கிராப்பர் ஹிட்லர். இவர் சுங்க திணைக்களத்தின் அதிகாரியாக வேலை பார்த்து வந்தார். அவரின் மூன்றாவது மனைவியின் நான்காவது மகன் ஹிட்லர். பிறந்தது முதலே ஹிட்லர் நோயுற்றவராக இருந்தார். அடிக்கடி காய்ச்சல் வரும். கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு பிறகு தான் உடம்பு தேறியது.

ஹிட்லருக்கு தாயிடம் செல்லம் அதிகம். தாய் மீது பக்தியும் பாசமும் கொண்டவர். பாடசாலையில் படிக்கும்போது ஹிட்லர் தான் வகுப்பின் முதல் மாணவன். பிறகு அவருக்கு படிப்பில் ஆர்வம் குறைந்தது. படம் வரைவதில் ஆர்வம் ஏற்பட்டது. விரைவிலே அழகான ஓவியங்கள் வரையும் ஆற்றலை பெற்றார். மாணவப்பருவத்திலேயே நிறைய நாவல்கள் படித்தார். போர்கள் பற்றிய கதைகள் என்றால் நாட்டம் அதிகம்.

1903 இல் ஹிட்லரின் தந்தை இறந்தார். தந்தையின் கண்டிப்பு இல்லாமல் வளர்ந்த ஹிட்லர் நாளுக்கு நாள் முரடனாக மாறினான். மாணவர், ஆசிரியருடன் சண்டை பிடிப்பார். தனது 17 ஆவது வயதில் கல்லூரி இறுதி தேர்வில் தேறினார் ஹிட்லர். அதற்காகக் கொடுத்த சான்றிதழை வாங்கிக் கொண்டு வரும் வழியில் நண்பர்களோடு சேர்ந்து மது அருந்தினார். சான்றிதழையும் கிழித்து எறிந்தார்.

1907 ஆம் ஆண்டில் ஓவியக்கல்லூரியில் சேர முயன்றார். அதில் அவருக்கு அனுமதி கிடைக்கவில்லை. அந்த ஆண்டின் இறுதியில் ஹிட்லரின் தாயார் இறந்து போனார். அதன் பின்பு ஓவியங்களைத் தயாரித்து வாழ்க்கை நடத்தினார். இரவில் கூட மண்ணெண்ணெய் விளக்கு வெளிச்சத்தில் கூட ஓவியங்களை வரைவார். இவர் வரைந்த ஓவியங்கள் நல்ல விலைக்கு விற்பனையாகின. அதனால் சொந்தமாக ஓவியக்கூடம் அமைத்தார். இச் சமயத்தில் சிந்தியா என்ற பெண்ணை ஹிட்லர் காதலித்தார். காதல் தோல்வியடையவே இராணுவத்தில் சேர்ந்தார். முதலாம் உலகப்போரின் போது ஜேர்மனி இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றினார்.

### ஹிட்லரின் இராணுவப் பிரவேசமும், வெற்றியும்

1918 இல் ஜேர்மனி தோற்றது. இத் தோல்விக்கு ஜனநாயகவாதிகளும் யூதர்களும் தான் காரணம் என்று ஹிட்லர் நினைத்தார். உலகில் ஜேர்மனியரே உயர்ந்த இனத்தவர் என்றும் உலகம் முழுவதையும் ஜேர்மனிய ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரவேண்டும் என்றும் விரும்பினார். ஹிட்லர் பேச்சு வல்லமை மிக்கவர். தேசிய சோசலிஸ்ட் ஜேர்மன் தொழிலாளர் கட்சியில் ஒரு உறுப்பினராக சேர்ந்து தனது பேச்சு வல்லமையால் விரைவிலே கட்சித் தலைவரானார்.

அரசாங்கத்தின் நிர்வாகதிறமையின்மையால் தான் நாட்டில் வறுமை, வேலையின்மை பெருகிவிட்டதாக பிரச்சாரம் செய்தார். அரசாங்கத்துக்கு எதிராக மக்களைத் தூண்டி விட்டு ஆட்சியைக் கைப்பற்ற முயன்றார். ஆனால் அந்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. அரசாங்கம் அவரை கைது செய்து 5 ஆண்டு சிறைத்தண்டனை விதித்தது. பின்பு அது ஓராண்டு தண்டனையாக குறைக்கப்பட்டது. சிறையிலிருந்த போது 'எனது போராட்டம்' என்ற பெயரில் தன் சுயசரிதையை எழுதினார்.

38 ஆம் பக்கம் பார்க்க....

1928 இல் நடந்த தேர்தலில் ஹிட்லரின் கட்சி தோல்வியடைந்தது. ஆனால் ஹிட்லர் சோர்ந்து போய்விடவில்லை. தன்னுடைய கட்சியின் பெயரை நாசிக் கட்சி என்று மாற்றி நாடு முழுவதும் தீவிரவாதத்தில் ஈடுபட்டார். அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் புரட்சிக்கு வழிவகுத்தார்.

இவருடைய இடைவிடாத உழைப்பும் பேச்சுத்திறனும் இராஜ தந்திரமும் வெற்றிபெற்றன. ஆட்சிக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்து பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். பாராளுமன்ற கட்டடம் கொளுத்தப்பட்டது. ஜனாதிபதியாக இருந்த ஹில்டன் போ்க் மக்கள் போராட்டத்திற்கு அடிபணிந்தார். 1933 ஜனவரி 30 ஆம் திகதி ஹிட்லரை பிரதமராக நியமித்தர். பிரதமராக இவர் பதவி ஏற்ற ஒன்றரை வருடத்தில் ஜனாதிபதி ஹில்டன் போ்க் மரணமடைந்தார்.

அதனால் ஜனாதிபதி பதவியையும் கைப்பற்றிக் கொண்டு ஜோ்மனியின் சர்வாதிகாரியானார். பாராளுமன்றத்தைக் கலைத்தார். இராணுவத் திணைக்களத்தினையும் இராணுவத் தளபதி பதவியினையும் தானே ஏற்றுக் கொண்டார். அரசியல் கட்சிகள் எல்லாவற்றையும் தடை செய்தார். இனிமேல் ஜோ்மனியில் ஜனநாயகம் என்ற பேச்சுக்கே இடமில்லை என அறிவித்தார். யூதர்களை அடியோடு அழிக்கவேண்டும் என முடிவு செய்து ஒரு பாவமும் அறியாத யூதர்களை கைது செய்து சிறையில் பட்டினி போட்டு சித்திரவதை செய்து கொன்றான். தினமும் சராசரியாக 6000 - 10000 பேர் வரை விஷப்புகையிட்டு கொல்லப்பட்டனர். ஹிட்லரால் கொல்லப்பட்ட யூதர்களின் எண்ணிக்கை சுமார் ஐம்பது லட்சம் ஆகும். 1939 இல் அல்பேனியா,செக்கொஸ்லோவாக்கியா ஆகிய நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டு போலந்து நாட்டின் மீது படைஎடுத்தான். இதனால் இரண்டாம் உலக யுத்தம் ஆரம்பமாகியது. யுத்தத்தின் ஆரம்பத்தில் ஹிட்லரின் கை ஓங்கியிருந்தது. ஆனால் போரில் அமெரிக்காவும் ரஷ்யாவும் இணைந்த பின்பு நிலைமை மாறியது. ஜோ்மனியின் தலைநகரான பொ்லினில் ஒரு சுரங்கம் அமைத்து தங்கியிருந்தார். இச் சுரங்கத்தில் தான் ஹிட்லரின் அலுவலகமும் படுக்கையறையும் இருந்தது.

ஹிட்லரின் அறை 15 அடி நீளமும் 10 அடி அகலமும் கொண்டது. 1945 ஏப்ரலின் பின் பெர்லின் நகரின் மீது ரஷ்ய விமானங்கள் குண்டுகளை வீசின. ஹிட்லர் தங்கியிருந்த பாதாள சுரங்கத்தின் அருகிலும் குண்டுகள் விழுந்தன. ஈவா விரவுன் என்ற பெண் 1930 ஆம் ஆண்டு முதல் ஹிட்லருடைய மனம் கவர்ந்த காதலியாக இருந்து வந்தார்.







## ஹிட்லரின் மரண சாசனம்

ஹிட்லர் இறப்பதற்கு முன் எழுதிய மரண சாசனத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

நாங்கள் இறந்தபிறகு எந்த ஜோ்மன் நாட்டு மண்ணுக்காக கடந்த 12 வருடங்களாக பாடுபட்டு வந்தேனோ, இந்த ஜோ்மன் மண்ணிலேயே என்னையும் ஈவாவையும் உடனே எரித்துவிட வேண்டும்.

என் சொத்துக்கள் எல்லாம் எனக்கு பிறகு என் கட்சிக்கு சேர வேண்டும். கட்சி அழிந்து விட்டால் நாட்டுக்குச் சேர வேண்டும்.

ஜோ்மனி மண்ணின் மீதும் மக்கள் மீதும் நான் கொண்ட பற்றும் பாசமும்தான் என்னை வழி நடத்தின. கடந்த 30 ஆண்டுகளாக என் சக்தி முழுவதையும் என் தாய்நாட்டின் மேன்மைக்காக செலவிட்டிருக்கிறேன்.

இந்தப் போருக்கு நானே மூலகாரணம் என்று யாரும் நினைக்கவேண்டாம். ஏனென்றால் போர்வெறி கூடாது. ஆயுதக்குறைப்பு செய்யவேண்டும் என்று நானே வலியுறுத்தி இருக்கிறேன்.

முதல் உலகப்போருக்கு பிறகு இப்படி இரண்டாவது உலகப்போர் மூளும் என்று நான் சற்றும் நினைக்கவில்லை. எப்படியோ போர் மூண்டுவிட்டது.

இந்தப் போரினால் நம்நாடு சந்தித்த பயங்கர விளைவுகள், நாசமாக்கப்பட்ட பிரம்மாண்டமான மாளிகைகள், தரைமட்டமாக்கப்பட்ட கலையம்சம் மிக்க நினைவுச்சின்னங்கள் யாவும் நம் மீது உலக நாடுகள் நடத்திய கோரத்தாக்குதலை நம்முடைய பிற்கால சந்ததியினருக்கு உணர்த்திக் கொண்டே இருக்கும்.

இந்த போருக்கு காரணமானவர்களைப் பார்க்கும் போதெல்லாம் ஒவ்வொரு ஜோ்மனிய இளைஞனுக்கும் உணர்ச்சியும் எழுச்சியும் ஏற்படும். இவ்வாறு இறுதிச் சாசனம் எழுதி கையெழுத்திட்டார் ஹிட்லர்.

30 ஆம் திகதி இரவு 9 மணியளவில் ‘ அன்று மாலை 4 மணிக்கு இத்தாலிய சர்வாதிகாரி முசோலினியும் அவரது மனைவியும் எதிர்ப்பாளர்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர் ’ என்று சுவீடன் நாட்டு வானொலி அறிவித்தது.



முசோலினியுடன் ஹிட்லர்

வானொலிச் செய்தியை ஹிட்லர் நேரடியாகக் கேட்டார். முசோலினியின் முடிவு ஹிட்லருக்கு மிகுந்த வேதனையை உண்டாக்கியது. அன்றிரவு 12 மணி அளவில் பொ்லின் நகரம் முற்றிலுமாக ரஷ்யப்படைகள் வசமாகிவிட்டது என்றும் எந்த நேரத்திலும் சுரங்க மாளிகை தகர்க்கப்படலாம் என்றும் ஹிட்லருக்கு தகவல் கிடைத்தது.

ஹிட்லரின் முகம் இருண்டது. மௌனமாக எழுந்து தன் தோழர்களுடன் கைகுலுக்கினார். பிறகு தன் அந்தரங்க உதவியாளரை அழைத்து நானும் ஈவாவும் ஒன்றாக இறந்துவிடப் போகிறோம்.

நாங்கள் இறந்த பின் எங்கள் உடல்களை ஒரு போர்வையில் சுருட்டி பெட்ரோல் ஊற்றி எரித்து சாம்பலாக்கி விடுங்கள். எங்கள் அறையில் உள்ள கடிதங்கள், டைரிகள், என் உடைகள், என் பேனா, கண்ணாடி முதலிய பொருட்களைச் சேகரித்து ஒன்று விடாமல் எரித்து விடுங்கள் என்று கூறிவிட்டு தன் காதலியையும் அழைத்துக் கொண்டு தன் அறைக்குச் சென்றார். அறைக்கதவு சாத்தப்பட்டது. வெகுநேரமாகியும் கதவு திறக்கப்படவில்லை. ஹிட்லரும் ஈவாவும் என்ன ஆனார்கள் என்று வெளியே இருந்தவர்களுக்கு தெரியவில்லை. வெளியே நீண்ட நேரம் காத்திருந்த மந்திரிகளும் தளபதிகளும் கதவை திறந்து கொண்டு உள்ளே சென்றனர்.




காதலி ஈவாவுடன் ஹிட்லர்



# அப்பா

மூன்றெழுத்தில் மற்றுமொரு அழகான கவிதை அப்பா. அற்புத மனிதர். உணர்வுகளை மறைத்து வைக்கத் தெரிந்த ஒரே காரணத்தால் மாதா, பிதா என்ற பட்டியலில் இரண்டாவது இடத்திற்குத் தள்ளப்பட்ட பாவப்பட்ட ஜீவன். மனைவி கரு சுமக்கத் துவங்கிய நாள் முதல், தன் குழந்தை பற்றிய கனவுகளைச் சேமிக்கத் தொடங்கிய பொறுப்புள்ள தந்தை. குழந்தைகளின் வரவிற்குப் பிறகு அவர்களின் நலனுக்காக எப்படிப்பட்ட அவமானங்களையும் சகித்துக் கொள்ளப் பழகும் புனித ஆத்மா. மகன், மகள் இன்றைய தேவை - களைவிட வருங்காலத் தேவைகளை மனதுக்குள் கணக்குப் போட்டு அதற்காகத் தன் சுகங்களை ஆரம்ப நாட்களில் இருந்தே தியாகம் செய்யும் புனித உள்ளம் படைத்தவர். மகளின் பிரிவிலும் மகனின் உயர்விலும் ஆனந்தக் கண்ணீரில் மனதுக்குள்ளேயே கூத்தாடும் பாசமிக்க உயிர். தன் பிள்ளைகளின் சுகத்துக்காகவும் உயர் கல்விக்காகவும் குடும்பத்தைவிட்டு தொலைதூரத்திற்கு பிரிந்து சென்று பணிபுரிந்து சம்பாதித்து பணம் அனுப்பி மற்றும் வேலை பார்க்கும் இடங்களில் மேலதிகாரிகளால் அவமானப்பட்டாலும் குழந்தைகளின் கல்வியை முன்னிட்டு வேலையை விடாமல் அந்த கஷ்டங்களை சகித்துக் கொள்ளும் தன்னலமற்றவர். மகனுக்கும் மகளுக்கும் அவர்கள் சம்பாதிக்கும் வரை ATM ஆக இருப்பவர். இந்த உறவுக்கு நன்றி சொல்ல ஒரு வாய்ப்பு தந்தையர் தினம். தந்தையின் தாய்மையை உணர வாய்ப்பளிக்கும் தினம். இழப்புக்குப் பின் வருந்துவதைவிட இருக்கும்போதே ஒரு சிறிய வாழ்த்தின் மூலம் நன்றி சொல்லாம். தாயைப் பொறுத்தவரை தன் மக்கள் சான்றோன் எனக் கேட்கும்போது மகிழ்ச்சிதான். ஆனால் அவர்களை சான்றோன் ஆக்குவதில் தந்தையின் பங்குதான் அதிகம். அதனால்தான் ‘ சான்றோன் ஆக்குவது தந்தைக்கு கடனே(கடன் வாங்கியாவது) ’ என்ற வார்த்தையும் வந்திருக்கும்.

எப்படி எப்படி
எல்லாமோ
தன் பாசம்
உணர்த்துவாள் அம்மா
ஒரேயொரு
கைஅழுத்தத்தில்
எல்லாமே
உணர்த்துவார்
அப்பா...

முன்னால்
சொன்னதில்லை
பிறர் சொல்லித்தான்



கேட்டிருக்கிறேன்
என்னைப்
பற்றி பெருமையாக
அப்பா
பேசிக்கொண்டிருந்ததை
அம்மா
எத்தனையோ முறை
திட்டினாலும்
உறைத்ததில்லை
உடனே
உறைத்திருக்கிறது
என்றேனும்
அப்பா
முகம் வாடும்போது
உன் அப்பா
எவ்வளவு உற்சாகமாக
இருக்கிறார் தெரியுமா
என என் நண்பர்கள்
என்னிடமே சொல்லும்
போதுதான் எனக்குத்
தெரிந்தது
எத்தனை பேருக்குக்
கிடைக்காத தந்தை
எனக்கு மட்டும் என

கேட்ட உடனே
கொடுப்பதற்கு
முடியாததால் தான்
அப்பாவை அனுப்பி
இருக்கிறாரோ
கடவுள்..?

சிறுவயதில்
என் கைப்பிடித்து
நடைபயில
சொல்லிக்கொடுத்த
அப்பா
என் கரம் பிடித்து
நடந்த போது
என்ன நினைத்திருப்பார்..?

சொல்லிக்
கொடுத்ததில்லை
திட்டியதும் இல்லை
இல்லை என்றும்
சொன்னதுமில்லை
வேண்டாம் எனக்
கூறியதும் இல்லை

இருந்தும் ஏதோ
ஒன்றினால்
கட்டுப்படுத்தியது
அப்பாவின் அன்பு

அம்மாவிடம் பாசத்தையும்
அப்பாவிடம் நேசத்தையும்
இன்றே உணர்த்துங்கள்
சில நாளைகள்
இல்லாமலும் போகலாம்



# பெண்கள் ஜாக்கிரதை

ஆடையகங்களில் உள்ள ஆடைமாற்றும் அறைகளிலோ, ஹோட்டல் அறைகளிலோ, குளியல் அறைகளிலோ நீங்கள் அறியாமல் யார் கண்ணிலும் தென்படாமல் துல்லியமாக இணைக்கப்பட்டிருக்கும் இரகசியக் கமராக்கள் பற்றி எச்சரிக்கையாக இருங்கள். நீங்கள் ஆடை மாற்றும்போதோ, குளிக்கும் போதோ உள்ள நிலையின் அந்தரங்கங்களை கமராக்கள் மூலம் படமெடுத்து இன்பம் காணும் இவ்வாறான கேடு கெட்டவர்கள் குறித்து தகவல் அறிந்தவர்கள் நமக்கு ஏன் வீண் வம்பு என ஒதுங்கி இருக்காது சமூகத்தில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய தார்மீகப் பொறுப்பை உணர்ந்து உரியவர்களுக்கு அதனை அறியப்படுத்துவதன் மூலம் இவ்வாறானவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கமுடியும். ஏற்கனவே சமூகச் சீர்கேடுகளால் அழிந்து கொண்டிருக்கும் எமது மக்களுக்கு இது இன்னுமோர் மோசமான செயலாக உள்ளது.

அறியப்பட்ட தகவல்களின்படி பின்வரும் இடங்களில் இவ்வாறான இரகசியக் கமராக்கள் பொருத்தப்படுகின்றன. ஆனாலும் தெரியாத இடங்கள் இன்னும் அதிகம்.

| | |
|---|---|
| குளியலறை Shower | Dress Changing Rooms |
| Door Lock | Power points |
| Lights | A/C s |
| Bedroom Toys | Fans |

பெண்மையின் தூய்மையையும் தாய்மையின் மகத்துவத்தையும் உணர்ந்து இவ்வாறான இழிவான செயலைச் செய்யாமல் இருப்பதோடு பெண்களே இவர்கள் மட்டில் உஷாராக இருக்க மறக்கவேண்டாம்.

தமக்கும் தாய், சகோதரிகள் உண்டென எண்ணிப் பார்க்காத சில கயவர்களின் ஈனத்தனமான செயலுக்கு இரையாகும் பெண்குலத்திற்கு அலை ஓசையின் எச்சரிக்கை இது.








# கருவில் ஏற்படும் மனப்பாதிப்பு என்றால் என்ன?

கருவில் ஏற்படும் மன பாதிப்பு என்றால் என்ன, அதற்கும் நம் மனநோய்க்கும் என்ன சம்பந்தம் என்று யோசிக்கிறீர்களா?

நம்முடைய கஷ்ட காலங்களும், மனப்பிரச்சனைகளும் இந்த உலகத்தில் பிறந்து அடிபட்ட பின்னர்தானே ஏற்படுகிறது.

பிறந்த பின் ஏற்படும் மனப்பாதிப்பு ஒரு வகை, பிறப்பதற்கு முன் தாயின் வயிற்றில் கருவாக இருக்கும் போதே ஏற்படும் மன பாதிப்பு மறுவகை!

பயம், படபடப்பு, பாதுகாப்பின்மை இவை மூன்றும் பெரும்பாலும் மனநோய்கள் ஏற்பட அடிப்படைக்காரணங்களாக அமைந்து விடுகின்றன. இத்தகைய பயங்கள் எந்த வயதிலும் தோன்றலாம். ஆனால் அவை உடனே வெளிவர வேண்டும் என்ற அவசியமில்லை. ஏதாவது காலகட்டத்தில், ஏதொ ஒரு சந்தர்ப்பத்தில் திடீரென வெளிப்படுகின்றன.

ஆராயும் போதுதான் அந்த மன பாதிப்பு எந்த வயதில், எந்தக் காரணங்களால் ஏற்பட்டது? யாரால் ஏற்பட்டது? எந்த சூழ்நிலையில் ஏற்பட்டது? என்று கண்டறிய முடிகிறது. இதைத்தான் சூழ்நிலை சிக்கல்களால் ஏற்படும் மனப்பாதிப்புக்கள் என்கிறோம். இந்த வகை மனப் பாதிப்புக்கள் எந்த வகை மருந்துகளுக்கும் கட்டுப்படுவதேயில்லை.

கருவறையும் ஒரு கல்விக்கூடம்தான். அது குழந்தை பயிலும் முதல் பள்ளிக்கூடம் எனலாம்.

ஆமாம் தாயிடமிருந்து குழந்தை உணவை மட்டுமா பெறுகிறது? உணர்வுகளையும் சேர்த்து அல்லவா பெறுகிறது. தாயின் எண்ண அலைகள் அப்படியே குழந்தையை சென்றடைகின்றன. கல்வியறிவும் சிறந்த கலைத்திறன்களும் கொண்ட தாய், கருவுற்ற காலத்தில் அந்த கல்வியிலும் கலைகளிலும் மனம் ஒன்றி ஈடுபடும் போது, அவற்றில் மெய் மறந்து லயிக்கும் போது – அந்த கல்வியும் கலைகளும், அறிவும் அப்படியே கருவிலிருக்கும் குழந்தையை சென்று அடைகின்றன. கருவிலிருக்கும் குழந்தை ஐந்தாவது மாதத்திலேயே கேட்கும் திறனையும், கிரகிக்கும் திறனையும் பெற்று விடுகிறது. தன்னைச்சுற்றி நடப்பவற்றை தாயின் மூலமாக அறிந்து கொள்கிறது. கருவறையில் அறியப்படும் கலைகள் கல்லறை வரை தொடர்கின்றன.

கல்வியை மட்டுமல்ல தாயின் கவலைகளையும், கண்ணீரையும் கூட குழந்தை கவனிக்கிறது.

அது மனதில் மௌனமான சோகம், அந்த சோகம் கருவை பாதிப்பது. கருவிலிருக்கும் குழந்தைக்கும் தெரியாது. தாய்க்கும் தெரியாது. இப்படி சோக ராகங்கள தினமும் குழந்தை கேட்க நேர்ந்தால்.. எனக்கு வாழ்வே, நிம்மதியே இல்லை. இதில் இந்த குழந்தை வேறு தேவையா என்று தாய் மனமுடைந்து அழும்போது, அந்த சேயும் மனதளவில் பாதிக்கப்படுகிறது. ஒரு பாதுகாப்பின்மை, பய உணர்ச்சி அந்த குழந்தையின் ஆழ் மனதில் கருவறையிலேயே ஆழமாக அழுத்தமாக எழுதப்பட்டு விடுகிறது.

பயமும் பாதுகாப்பின்மையும்தான் மனநோயின் அடித்தளம், இவ்வாறு கவலைகளுடனும் கண்ணீருடனும் தாய் போராடும்போது குழந்தை நாளொரு கவலையும் பொழுதொரு பயமுமாய் மெல்ல மெல்ல வளர்கிறது.

அது இந்த உலகத்திற்கு வருமுன்பே மனதால் அடிபட்டு, பயத்துடனேயே பிறக்கிறது. இந்தப் பயங்களை காலமும் அழிப்பதில்லை. அப்படி அந்த குழந்தை பாதிக்கப்பட்டுள்ளது என்பது யாருக்கும் தெரிவதுமில்லை.

எத்தனையோ வருடங்கள் கழித்து இந்த பயங்கள் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் மனபாதிப்பாக வெளிப்படுகிறது.

கருவில் மனநிலை பாதிக்கப்பட்ட குழந்தையா என்று எப்படி கண்டுபிடிப்பது?

1. இப்படி பாதிக்கப்பட்ட குழந்தைகள் யாருடனும் ஒட்டாமல், கலகலப்பாக இல்லாமல் சோர்ந்து காணப்படுவார்கள்.

2. ஏதோ இனந்தெரியாத பயம் எப்போதும் இவர்களிடம் காணப்படும்.

3. சிறு வயதிலேயே தாழ்வு மனப்பான்மை, மனச்சோர்வு இவற்றால் பாதிக்கப்பட்டிருப்பார்கள். ஆனால் வெளியே தெரியாது.

4. சில குழந்தைகள் காரணமின்றி கோபப்படுதல், அளவுக்கு மீறிய வெறிச் செயல்களில் ஈடுபடுதல், வக்ரமான எண்ணங்கள் இவற்றால் பாதிக்கப்பட வாய்ப்புகள் உண்டு. இளம் குற்றவாளிகளாக சீர்திருத்தப் பள்ளியில் இருக்கும் குழந்தைகளில் பலர் இப்படி கருநிலையில் மனம் பாதிக்கப்பட்டவர்களாக இருப்பது ஆய்வுகளில் தெரிய வருகிறது.

5. இத்தகைய குழந்தைகளை புரிந்து கொள்வது கடினமாக இருக்கும். ஒரு நேரம் இருக்கும் புத்தி, நடத்தை மறுநேரம் இருக்காது.

6. சிலர் படிப்பில் சிறந்து விளங்கினாலும் ஏதாவதொரு நடத்தை ஒவ்வொரு விதமாக மாறுபட்டு ஒரு வித்தியாசமான குழந்தையாக காணப்படும். ஆனால் இதை நாம் *கவனிப்பதில்லை.*

7. சுருக்கமாகச் சொன்னால் இப்படி பாதிக்கப்பட்ட குழந்தைகள் நடத்தை ஒவ்வொரு விதமாக மாறுபட்டு ஒரு வித்தியாசமான குழந்தையாக காணப்படும். ஆனால், இதை நாம் கவனிப்பதில்லை.

இது குறித்து ஆய்வுகள் உலகம் முழுவதும் நடைபெற்று வருகிறது.

ஹிப்னோதெரபி முறையில் கருநிலை மனபாதிப்பை ஆராய்தல்


உள்மனம்தான். அந்த உள் மனதில் விதைக்கப்படும் எண்ணங்கள் தான் ஆழமாக அழுத்தமாக பதிந்து ஒருவரை மனநோயாளியாகவோ, செம்மையான மனம் கொண்டவராகவோ மாற்றுகிறது. உள்ளம் என்பது சரியாக இருந்தால் உலகம் முழுவதும் இனிக்கிறது.

இந்த உள்மனதை ஹிப்னோ முறையில் நம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து கடந்த காலத்தை நோக்கி செல்லுதல் முறையில், வயதை படிப்படியாக குறைத்த அவருடைய கருநிலை பருவத்திற்கு கொண்டு சென்று, அப்போது ஏற்பட்ட அனுபவங்களை ஆராய முடியும்.

செல்விக்கு வயது 18, 3 வயது முதல் நெஞ்சு வலி, படபடப்பு, பயம் என்று ஒரே பிரச்சனை இது இதயம் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருக்கும் என்று மருத்துவர்களின் ஆலோசனைப்படி எல்லா டெஸ்ட்டுகளும் எடுத்து, எல்லாம் சாதாரணம் என்று வந்துவிட்டன. இதய வலிக்கு தரப்பட்ட மருந்துகள் தற்காலிகமாக அந்த வலியை நிறுத்தவே தவிர நிரந்தர தீர்வு கிடைக்கவில்லை. செல்வியால் கடுமையாக எதையும் செய்ய முடியாது. தொடர்ந்து ஒரு 4 மணி நேரம் படிக்க முடியாது. ஞாபக மறதியும் வந்து வாட்டும். படித்தால் கண் நரம்புகள் இழுப்பது போல் இருக்கும். தலைப்பாரமாகிவிடும். ஆனால் உடலளவில் செல்விக்கு எந்த பிரச்சனையும் இல்லை என்பது உறுதியாக தெரிந்தது. இது மனம் சம்பந்தப்பபட்ட பிரச்சனையாக இருக்கும் என்ற மருத்துவர்களின் ஆலோசனைப்படி மனநல சிகிச்சசை க்காக செல்வி இங்கே வந்தபோது மிகவும் டென்ஷனாக குழப்பத்துடன் இருந்தாள்.

மனம் சம்பந்தப்பட்ட பிரச்சனை எப்படி உடல் நோயாக மாறும் என்று கேட்கத் தோன்றுகிறது இல்லையா? ஆமாம், மனம் பாதிக்கப்படும்போது உடலும் பாதிக்கப்படுகிறது. இதை உளம் சார்ந்த உடல் நோய்கள் (Pshcho Somatic Discorders) என்கிறோம். அதாவது மனவேதனை காரணமாக ஏற்படும் உடல் நோய்கள். வியாதி உடலிலே அதற்கான ஆணி வேர் மனதிலே என்பது போல செல்விக்கு மனப் பிரச்சனையும், உடல் பிரச்சனையும் சேர்ந்தே இருந்தது. வாட்டியது.

## கருநிலை பருவத்தில் ஹிப்னோ ஆய்வில் செல்வி சொன்னது என்ன?




செல்வியின் வயது ஹிப்னோ ரீக்ரஷன் மறையில் படிப்படியாக குறைக்கப்பட்டு 1 வயது வரை ஆராய்ந்தும் எந்தத்தடையமும் கிடைக்காததால் கருநிலை பருவத்திற்கு செல்வி அழைத்துச் செல்லப்பட்டாள். அவள் அப்போது சொன்னது கருவறை எனக்கு சிறை போல இருட்டாக இருந்தது தினமும் நான் கேட்டதெல்லாம் அப்பாவின் ஏச்சுக்களும், அம்மாவின் அழுகையும்தான், துயரம் தாங்காமல் அம்மா அழுது அழுது அவளுக்கு நெஞ்சுவலியே வந்து விடும்.

எப்போது அப்பா வீட்டிற்கு வருவாரோ, என்ன செய்வாரோ என்ற திகில் அம்மாவிடம் எப்போதும் இருந்தது. நம் குடும்பம் இருக்கும் லட்சணத்தில் இந்த குழந்தை தேவை தானா? இதை அழித்துவிடு என்று பலமுறை சொல்லியும் நீ கேட்கவில்லை என்று வெறித்தனமாக அம்மாவின் கழுத்தை நெறிக்க வந்தார். அம்மா வீறிட்டு அலறி, நெஞ்சுவலி வந்து கீழே விழுந்துவிட்டாள். அம்மாவை யாரும் கவனிக்கவில்லை. பயமும் திகிலும் அம்மாவவை ஆட்டிப் படைத்தன. இந்த உணர்வுகள் எல்லாம் என்னை மிகவும் பாதித்தன. அம்மாவின் வலியும், வேதனையும் என்னைத் தாக்கின. இந்த உலகத்தில் பிறக்கவே பிடிக்கவில்லை.

எப்போதும் இதே நினைவு என்னை வந்து இப்போதும் வாட்டுகிறது, இந்த துயர நினைவுகள் வரும்போது தலைப்பாரமும் நெஞ்சுவலியும் பயமும் ஏற்படுகின்றன. யாரைப் பார்த்தாலும் பயம். எங்கே சென்றாலும் பயம். அந்த பயம் அதிகமாகும் போது நெஞ்சுவலி என்று பயமே வாழ்க்கையாகிவிட்டது. வாழ்கையில் பயங்கள் ஏற்படலாம், ஆனால் பயமே வாழ்கையாகிவிடக்கூடாது. எனக்குப் படிப்பு திருமணம் எதுவும் வேண்டாம். என் அம்மாவைப் போல நானும் கஷ்டப்பட விரும்பவில்லை. என்று சொல்லி அழுத செல்வியை அமைதப்படுத்தி தக்க சிகிச்சை தந்தபின் படிப்படியாக செல்வி குணமடைந்தாள் இப்படிப்பட்ட பிரச்சனைகள் விரைவில் தீர்வதில்லை. மிகவும் கடுமையான முயற்சியுடன் தான் குணப்படுத்த முடியும் என்பதே உண்மை பொறுமையும், திறமையும் இருந்தால் வெற்றி நிச்சயம்.

இத்தகைய கருவில் ஏற்படும் மன பாதிப்பைக் கூட குணப்படுத்தும் அரிய ஹிப்னோதெரபி என்றால் மிகையாகாது.

லதாவுக்கு வயது நான்கு. எதற்கும் அழமாட்டாள். பசித்தாலும் அழவே மாட்டாள். பூச்சி கடித்தாலும் அழமாட்டாள். பார்வையில் ஒரு குழந்தைக்கே உரிய சுட்டித்தனம் இருக்காது எந்த நேரமும் கண்ணை மூடிக்கொண்டு தனியாக உட்காந்திருப்பாள். ஒரு வேளை இது மன வளர்ச்சியற்ற குழந்தையோ (Mentally Retarded Child) என்று எண்ணி சிகிச்சைக்கு அழைத்த வந்தார்கள். உளவியல் ஹிப்னாடிச முறையில் ஆராய்ந்த போது உண்மை தெரிந்தது.

லதாவுக்கு பிரச்சனை அவள் ஒன்பது மாதக் கருவாக தாயின் வயிற்றில் இருந்தபோதே ஆரம்பித்துவிட்டது. லதாவின் தாய் உஷாவுக்கு பயந்த மனசு, கணவன் குடித்துவிட்டு வந்து என்ன செய்வானோ என்ற தினசரி திகிலும், பிரசவத்திற்கு அம்மா வீட்டிற்குக் கூட அனுப்பாத அவன் குணமும் பீதியைத தந்தன இதை யாரிடம் சொல்லி அழுவது என்று அவள் தனக்குத்தானே சிந்தித்து மாய்ந்து போவாள். இந்த தாயின் பயமும், திகிலும் அவள் உடலைப் பாதித்தன. உடலில் உண்டான கருவையும் பாதித்தன. தாயின் மன இயல்புகளை குழந்தை அப்படியே பிரதிபலித்தது. அதனால்தான் கருவுற்றிருக்கும் நேரம் ஒரு தாய் மகிழ்ச்சியாக, ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று சொல்கிறோம். இங்கு லதாவும், அவள் அன்னையைப் போல உணர்ச்சிகளை உட்புதைத்து மன அழுத்தமும் மன இறுக்கமும் உள்ள குழந்தையாக பிறந்தவள். தாயின் மன பாரம் இங்கு குழந்தையை பாதித்தது. தக்க ஹிப்னாடிச சிகிச்சைக்குப் பின் பாதிப்பும் நீங்கியது.


தேவை
MARKETING EXECUTIVE
Call: 011 272 2990



# சந்தேகம்..சந்தேகம்..சந்தேகம்..

**உறவுகளானாலும் சரி, நட்புகளானாலும் சரி மனம் விட்டுப்பேச முடிந்த அளவு மட்டுமே ஆழப்படுகின்றன. பலம் பெறுகின்றன. மனம் விட்டுப் பேசுவது நின்று போகுமானால் அனுமானங்களும் சந்தேகங்களும் நிஜங்களின் இடத்தைப் பெற்றுக் கொண்டு எல்லாவற்றையும் நிர்ணயம் செய்ய ஆரம்பித்து விடுகின்றன. பின் அந்த உறவுகளில் விரிசல் விழுகின்றன. நட்புகள் துண்டிக்கப்படுகின்றன. என்றோ படித்த ஒரு வியட்நாமியக் கதை நினைவுக்கு வருகிறது.**

ஒரு இராணுவ வீரனும், ஒரு இளம் பெண்ணும் காதலித்துத் திருமணம் செய்து கொள்கிறார்கள். மூன்றே மாதத்தில் போர் ஏற்பட இராணுவவீரன் போருக்குப் போக வேண்டியதாகி விடுகின்றது. அவன் போகும் போது மனைவி கர்ப்பிணி. இருவருமே மிகுந்த மன வருத்தத்தில் பிரிகிறார்கள். போர் முடிந்து உயிரோடு திரும்புவது நிச்சயமில்லையல்லவா?

ஆனால் அதிர்ஷ்டவசமாக போருக்குப் போன வீரன் மூன்றாண்டுகள் கழிந்து வெற்றிகரமாக திரும்புகிறான். விமானத்தளத்தில் அவன் மனைவியும், மகனும் அவனுக்காகக் காத்திருக்கிறார்கள். மனைவியையும் மகனையும் ஆனந்தமாகக் கட்டியணைத்துக் கொள்கிறான் அந்த வீரன். அவன் கண்ணிலும் மனைவி கண்ணிலும் ஆனந்தக் கண்ணீர். வீடு திரும்புகிறார்கள். கணவனுக்குப் பிடித்த சமையல் செய்ய பொருட்கள் வாங்கி வர மனைவி மார்க்கெட்டுக்குச் செல்ல வீட்டில் மகனும், தந்தையும் மட்டுமே இருக்கிறார்கள். கூச்சத்துடன் ஒதுங்கி நின்ற மகனைப் பார்த்து வீரன் கேட்கிறான். அப்பாவுடன் ஏன் பேசமாட்டேன் என்கிறாய்?

அந்தச் சிறுவன் குழப்பத்துடன் தந்தையைப் பார்த்துவிட்டு சொல்கிறான். நீங்கள் ஒன்றும் என் அப்பா இல்லை..

வீரன் மகனைக் கேட்கிறான்...பின் யார் அப்பா?

தினமும் என் அம்மா நிற்கும் போது நிற்பார். அம்மா உட்காரும் போது அவரும் உட்கார்வார். படுக்கும் போது அவரும் கூடப் படுத்துக் கொள்வார். அவர் தான் என் அப்பா என்று அம்மா சொல்லியிருக்கிறாள்..

வீரனுக்குக் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போல இருந்தது.

மனைவி பொருட்கள் வாங்கிக் கொண்டு வந்த பின் கணவனிடம் திடீர் மாற்றத்தைக் கண்டாள். அவன் அவள் சமைத்ததை உண்ணவில்லை. அவளை அவன் தொடவில்லை. அவள் அவன் அருகில் வருவதைக் கூட மறுத்தான். இரண்டு நாட்கள் இப்படியே நிகழ மனைவி மனமுடைந்து தற்கொலை செய்து கொள்கிறாள்.

மனைவி இறந்த அன்று இரவு தந்தையும் மகனும் படுத்துக் கொள்ளச் செல்லும் போது தந்தையின் நிழலைக் காண்பித்து மகன் சொல்கிறான். இதோ என் அப்பா...

திகைத்த வீரன் மகனை விசாரிக்கும் போது உண்மை வெளிவந்தது. தாயின் நிழலைப் பார்த்த மகன் ஒரு நாள் இது யார் என்று வெகுளித்தனமாய் கேட்ட போது மகன் தந்தை அருகில் இல்லாத குறையை உணரக்கூடாது என்று அவள் இதுதான் உன் தந்தை என்று சொல்ல சிறுவன் அன்றிலிருந்து அந்த நிழலையே தந்தையாக நினைத்து வந்திருக்கிறான்.



வீரன் தாங்கமுடியாத குற்றவுணர்ச்சியாலும், துக்கத்தாலும் மனமுடைந்து போகிறான்.

இந்தக் கதையில் மகன் சொன்னதைக் கேட்ட வீரன் தன் மனைவியிடம் விளக்கம் கேட்டிருக்கலாம். மனைவியும் கணவனின் நடவடிக்கைக்கு விளக்கம் கேட்டிருக்கலாம். இருவரும் வெளிப்படையாக மனம் விட்டுப் பேசியிருந்தால் அவர்கள் வாழ்க்கை ஆனந்தமாகச் சென்றிருக்கும். ஆனால் கணவன் தன் மனைவியின் நடத்தை மோசமாக இருந்திருக்கிறது என்று தானாக முடிவெடுத்து அப்படி வெறுப்புடன் நடந்து கொண்டான். மனைவியாவது ஏன் இப்படி நடந்து கொள்கிறீர்கள் என்று அவனைப் பதில் சொல்ல வற்புறுத்தியிருக்கலாம். அப்படிச் செய்யாமல் தானாக வாழ்க்கையை முடித்துக் கொண்டாள். ஒரு குடும்பமே தகர்ந்து போனது வாய் விட்டுக்கேளாமல் மனம் விட்டுப் பேசாமல் இருந்ததனால் அல்லவா?

எதையும் தவறாகப் புரிந்து கொள்ளுவதும் தவறாக ஆக்கி விடுவதும் சுலபம். சந்தேகக் கண்ணாடியை வைத்துப் பார்க்கும் போது எதற்கும் எத்தனை தப்பான அர்த்தங்களும் நம்மால் காணமுடியும். இந்த முட்டாள்தனத்தில் பலியாவது உறவுகளும், நட்புகளும், சந்தோஷங்களும் தான்.


புரியாத போது வாய் விட்டுக்கேளுங்கள். முரண்பாடாக நடந்து கொள்வதாகத் தோன்றும் போது ஏன் என்று வெளிப்படையாகக் கேளுங்கள். நீங்களாக அனுமானிக்காதீர்கள். அதே போல் நீங்களும் வழக்கத்திற்கு மாறாக நடந்து கொள்வீர்களேயானால் ஏன் என்பதை தெளிவுபடுத்துங்கள். அவர்களுக்குப் புரியும் என்று நீங்களாக நினைத்துக் கொள்ளாதீர்கள்.



தவறு என்று நினைப்பதை உங்கள் குடும்பத்தினரிடமும் சரி, நண்பர்களிடமும் சரி கண்டிப்பாகத் தெரிவியுங்கள். அதைக் கேட்டு அவர்கள் சொல்லும் காரணங்கள் நியாயமானவையாகக் கூட இருக்கலாம்.

அப்படியில்லையென்றாலும் நீங்கள் சொன்ன பிறகு தவறு என்பதைப் புரிந்து அவர்கள் திருத்திக் கொள்ளவோ, மீண்டும் அப்படிச் செய்யாமலிருக்கவோ வாய்ப்புகள் உள்ளன அல்லவா? இப்படி அவ்வப்போதே சரி செய்து கொள்ள வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொள்வது மனம் விட்டுப் பேசுவதாலேயே சாத்தியமாகிறது. அப்படிச் செய்யாமல் போகும் போது லேசாக எழும் விரிசல் அதே போன்ற தொடர் செய்கைகளால் பெரிதாகிக் கொண்டே வந்து பிரிவினையையே ஏற்படுத்தி விடுகிறது.எனவே நீண்டநாள் ஆழமான நட்பும் உறவும் நீடிக்க வேண்டுமானால் இந்த தாரக மந்திரத்தை மறந்து விடாமல் கடைப்பிடியுங்கள்.

வாய் விட்டுக் கேளுங்கள். மனம் விட்டுப் பேசுங்கள்.



### சமாதானம்

பக்கத்து வீட்டுக்காரருடன்
தீராத சண்டை.....
சமாதானம் பேச,
வேலி தாண்டிப் போய்
பூத்திருக்கிறது
ரோஜாப்பூ!

### நிறுத்தம்

பேருந்து முழுவதும்
தொங்கும் பயணிகள்.
ஏற வழியில்லாது
நிறுத்தத்திலேயே
நின்று கொண்டது
காற்று!

KPT/JPT/DFT/US/B33

# LINCOLN UNIVERSITY COLLEGE

www.lincoln.edu.my

No Sponsor
Tuition Fee After the VISA
No IELTS
Free Consulting

## Diploma in Nursing
( A7151 )

Diploma in Nursing is a three years program. It is open to those who have the desire to embrace a profession which is self-gratifying and humanistic. To meet the ever increasing demand for health care, the courses are designed to endow the graduates with adequate knowledge and skill which will enable them to function effectively as a **Registered Nurse** and member of health care team locally or globally.





## Dip. in Medical Assistant
( KA 10997 )

Medical Assistants are health care professionals who contribute to the health of the nation in the delivery of health care services to the general population. Medical Assistants provide medical service in the hospitals (various disciplines such as **Emergency department, Orthopedic department, Ophthalmology department (EYE) and many other specialist clinics) whereas in the public health sector,** MA's actively participate and contribute to implement various health programs throughout the country. Medical assistants also provide Emergency Medical care (pre-hospital care) before a patient arrives to a hospital/clinic.

## Dip. in Physiotherapy
( PA 11020)

3 years of Diploma in Physiotherapy programme will provide the students with all knowledge on how to diagnose and treat diseases and injuries related to physical therapy and perform an important function in looking after the well-being of the community. Physiotherapists do the clinical assessment of the patient before they make a diagnosis following SOAP NOTES recommended by **Chartered Society of Physiotherapists, UK and American Physical Therapists Association.**

## MBA
( PA 0797)

The aim of the programme is to prepare students for upper management and executive-level positions by helping them develop key managerial competencies including critical thinking, systems thinking, team building, decision-making, and ethical leadership which can be applied in any type of business enterprise. An MBA degree can benefit those in positions in business and management, especially those in executive and managerial positions. An MBA programme offers a range of benefits for the successful applicant, including: **Business Knowledge: Leadership Abilities: Networking:**





## Doctor of Medicine (MD)
( MQA PA0927 )

5 years of MD programme will provide the graduates with all knowledge on how to diagnose and treat diseases and injuries and perform an important function in looking after the well-being of the community. Thorough knowledge of diseases and their symptoms are required for diagnosis and treatment. Medical doctors first compile a clinical history of the patient before they make a diagnosis. Graduates will apply several techniques and apparatus in their examinations in order to form an image of the disease or injury.

## DBA
( MQA/PA0984 )

It is in this context that the Lincoln University College introduced its innovative **Doctor of Business Administration (DBA)** - into its other post-graduate management education programmes. The DBA: exposes candidates to critical management issues and relevant theories; ensures that students have a thorough grounding in their chosen field; and requires them to demonstrate a post-MBA level of conceptual understanding. It is designed to develop: their ability to source, analyze, interpret, explain and link data; their facility to communicate research effectively and expeditiously; and their skills of translating concepts into practice.

## Dip in Computer Science
( A1829 )

This programme aims to produce graduates who will have the ability to write computer applications to aid day-to-day operations of organizations; maintain computing environments effectively and efficiently; and develop automated procedures for routine organizational tasks. A primary objective is to give students the understanding to be in control of the technology and the confidence to embrace new developments in the field as they emerge. The two and a half years programme covers technology appreciation on the first year; and focus on understanding modern computing applications on the second year.


World Recognized UK University Degrees
University of London, UK
BSc.(Hons) in Creative Computing
BSc.(Hons) in Computing & Information System
BSc.(Hons) in Business Administration (with specialization in Marketing / HRM / International Business)
Hertfordshire University, UK
Master in Contemporary Healthcare
BSc.(Hons) in Contemporary Healthcare
University of Huddersfield, UK
BSc. (Hons) in Nursing Studies
2 Save Million
Why study UK Programmes in Malaysia
Lectures delivered by UK University Lecturers
Can save minimum 2 Million of Education Cost
Affordable Tuition Fees & lowest living cost
MULTIMEDIA APPLICATION
BA (Hons) in Creative Multimedia Technology
Diploma in Multimedia Application
G.C.E.(O/L)
G.C.E.(A/L) / EDEXCEL HND
Career Opportunities
Web Designer
Animator
Graphic Designer
3D Speacialist
Multimedia Director
Graphic Consultant
Multimedia Interactive Engineer
Special Effects Engineer (Specialist)
Diploma in Nursing
Diploma in Pharmacy
Diploma in Physiotherapy
Diploma in Medical Assistant
HOSPITALITY MANAGEMENT
Exchange / Transfer Programme to USA & FINLAND
Doctor of Business Administration (DBA) in Hospitality Management
Master of Business Administration (MBA) in Hospitality Management
BSc (Hons) in Hospitality Management
G.C.E.(O/L) + Diploma
G.C.E.(A/L)
BENEFITS
Free Uniforms & Clinical Training (18 months)
Free Accommodation
Free Transportaion
After completion of the course studnts are required to pass the Malaysian Nursing Board Examination. Upon clearing the examination, students will be able to apply to the Malaysian Nursing Board and after successful registration may work both locally and internationally.
ENTRY REQUIREMENTS G.C.E (O/L)
INTAKES November, January, March
University of HUDDERSFIELD
HAAGA-HELIA
LINCOLN
UH
Mizzou
LINCOLN UNIVERSITY COLLEGE - MALAYSIA
SRI LANKA OFFICE
# 14/1-1-3, 37th Lane, Colombo 06.
E-mail : silmy@lincoln.edu.my
Hot line : 0712-545000 , 0775-545000




பெற்றோர்களே!
உங்கள் செல்வங்களான
மலரும் மழலைகளுக்கு களம் அமைக்கும்
அலைஓசையின் இச்சிறுவர் பகுதியை
அவர்களின் அரிய ஆக்கங்களால்
அலங்கரிக்க வழிகோலுங்கள்.

‘ மழலைகளின் ஓசையில் இணைந்து கொள்ள ’

அலைஓசையில் நீங்களும் இணைய...

பெயர் : ..............................................................

வயது : ..............................................................

முகவரி : ..............................................................

..............................................................

தொ.பேசி இல : ..............................................................

பாடசாலை : ..............................................................



நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி

**ATA Aspirations (Pvt) Ltd.**
No: 122/B, Galle Road,Dehiwala South, Colombo.
Tel: 011 2722990, 011 7207989
Mob: 077 6874576, 0776408643


# சிறுவர்களே


உங்களுக்கான போட்டி இதோ!
அருகிலுள்ள பகுதிகளை பூரணப்படுத்தி
**Lumala City** வழங்கும் அழகிய
பெறுமதியான பரிசினை வெல்லுங்கள்.






Fill up the crossword puzzle.




1. ZEBRA 
2. ZERO 
3. ZOO 
4. ZIP 

Match the colors with the alphabets and color the tiger cub.

| A | C | B | F | E | G | H | I | D |
|---|---|---|---|---|---|---|---|---|
| RED | GREEN | BLUE | ORANGE | PINK | YELLOW | BROWN | BLACK | WHITE |





கு.கௌதமன்
மாவட்ட உளசமூக இணைப்பாளர்
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

# தற்கொலை ஒரு சமூக நோக்கு

தற்கொலை என்பது வாழ்ந்தது போதும் என்ற எண்ணமேயன்றி இதற்கான விருப்பம் அன்று என உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

சராசரியாக 40 செக்கன்களுக்கு ஒரு தற்கொலையும் 3 செக்கன்களுக்கு ஒரு தற்கொலை முயற்சியும் இடம்பெற்ற வண்ணமுள்ளன. இலங்கையில் வருடா வருடம் 30000இற்கு மேற்பட்டவர்கள் தற்கொலை செய்து கொள்கின்றனர். இதைவிட பத்து மடங்கானோர் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றனர். உலகில் அதிககூடிய தற்கொலை வீதம் கொண்ட நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இலங்கையில் சராசரியாக நாளொன்றிற்கு 50 தற்கொலைகள் இடம் பெறுகின்றன.

இறைவன் தந்த இந்த இன்னுயிரைத் தாமாகவே அழித்துக் கொள்ளும் துர்ப்பாக்கிய நிலை ஏற்றுக் கொள்ளப்பட முடியாத விடயமாகும். அதாவது தான் வாழ்வதை விட இறப்பது மேலானது என்று நினைத்து இதில் ஈடுபடுகின்றனர். தற்கொலை என்பது ஒருவர் நினைத்துக் திட்டமிட்டு தனது உயிரைத் தானாகவே அழித்தலாகும். தம் வாழ்வுடன் தொடர்புபட்ட மிகமுக்கியமான நபர்களுக்கு. தமது நிறைவேற்றப்படாத உளத் தேவைகளைத் தெரியப்படுத்த எடுக்கும் முயற்சியே தற்கொலையாகும்.


இயலாமை காரணமாக எடுக்கும் இறுதி மடியாகத் தற்கொலை காணப்படுபகின்றது. வாழ்வில் பற்றும் பிடிப்பும் அற்ற நிலையில் பெரும்பான்மையானோர் இதில் ஈடுபடுகின்றனர். தாங்க முடியாத ஒரு நிலைமையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக தற்கொலை என்ற ஆயுதத்தைக் கையிலெடுத்து தம்மை அழிக்கின்றனர். கயவன்முறையின் உச்சக் கட்ட வெளிப்பாடே தற்கொலையாகும். அதாவது ஒருவர் தன்னை தானே வன்முறைக்குட்படுத்தல் இதுவாகும். அதன் இறுதி விளைவு தற்கொலையில் முடிவடைகின்றது.

வயதானவர்கள், ஆண்கள், பெண்கள், கட்டிளமைப் பருவத்தினர் என்ற வேறுபாடின்றி தற் கொலையில் ஈடுபட்டாலும் கட்டிளமைப் பருவத்தினரே இதில் அதிகம் ஈடுபடுகின்றனர். கட்டிளமைப் பருவத்தினர் உணர்ச்சி மேலீட்டால் இதில் ஈடுபடுகினறனர்.

தூக்குப்போடுதல், அலரிவிதையை அரைத்துச் சாப்பிடுதல், தனக்குத்தானே தீ மூட்டுதல், கிருமிநாசினிகளை அருந்துதல், அளவுக்கதிகமாக தூக்க மாத்திரை உட்கொள்ளல், இரத்த நாளங்களை அறுத்தல், உயரமான இடத்தில் இருந்து குதித்தல், ஆறு – குளம் – கடல் என்பவற்றில் பாய்தல்.. போன்ற வல்வேறு வழிகளில் தற்கொலைகளில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு ஈடுபடுபவர்களில் சிலர் இறுதி நேரத்தில் தாம் காப்பாற்றப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் வைத்திய உதவிகளை நாடுகின்ற போதும், சிகிச்சை பலனளிக்காத நிலையில் இறுதியில் இறக்கின்றனர். தற்கொலைக்குப் பல்வேறுபட்ட காரணங்களுள்ளன. சிலர் அற்ப காரணங்களுக்காகவும் தமது உயிலை அழித்துக் கொள்ள முனைகின்றனர்.

## தற்கொலைக்கான காரணிகள்

எதுவித உதவியுமற்ற நிலையில், முற்றுமுழுதாக நம்பிக்கையிழந்த நிலையில், தனக்கு யாருமே இல்லை. தான் தனித்துப் போய்விட்டேன் என்ற நிலையில் ஒருவர் தற்கொலையில் ஈடுபடுகின்றார். தற்கொலையில் ஈடுபடுகின்றவர்களில் 20% ஆனோர் பிரச்சனையிலிருந்து எவ்வாறு விடுபடலாம் என்ற வழிதெரியாதவர்களும், 40% ஆனோர் மதுபோதைப்பொருளுக்கு அடிமையானவர்களாகவும் 40% ஆனோர் உளநோயால் பீடிக்கப்பட்டவர்களாகவும் காணப்படுகின்றனர். அதற்கான காரணங்கள் வருமாறு:



## 1. குடும்பரீதியானவை

கணவன் மனைவியிடையேயான உறவுப் பிணக்குகள் இறுதியில் தற்கொலையில் முடிவடைகிறது. கணவனுக்கு அல்லது மனைவிக்கு வேறு பாலியல் தொடர்புகள் ஏற்படும் போது அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் சிலர் தற்கொலையில் ஈடுபடுகின்றனர்.

## 2. உறவு ரீதியானவை

எமது குடாநாட்டில் நடந்த தற்கொலைகளுக்குப் பிரதான காரணமாக காதல் உறவு என்பது காணப்பட்டது. அதாவது இளைஞர்கள் பெரும்பாலும் தற்கொலையில் ஈடுபடுவதற்கு காதல் தோல்வியை முக்கிய காரணமாகவுள்ளது. இன்றைய இளைஞர்கள் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என வாழத்தலைப்பட்டு காதல் உறவில் ஈடுபடுகின்றனர். மனமுதிர்ச்சியற்ற, உடலை மட்டும் மையப்படுத்திய இந்தக் காதலில் சில பெண்கள் தங்கள் உடலையும் பகிர்ந்து கொண்டுள்ளனர். இவ்வாறான நிலையில் விரும்பத்தகாத கர்ப்பம், சட்ட விரோத கருக்கலைப்பு போன்றனவும் ஏற்படுகின்றன. சில பெண்கள் காதலித்தவர்களால் கைவிடப்படும் போது அவமானம், ஏமாற்றம் என்பவற்றைக் தாங்கிக் கொள்ள முடியாமல் தங்கள் வாழ்வைத் தாங்களாகவே அழித்துக் கொள்கின்றனர். காதலன் அல்லது காதலியால் ஏமாற்றப்பட்டு தற்கொலை செய்து கொண்டவர்களே கடந்த காலாண்டில் அதிகம்.

## 3. உளம் சார்ந்தவை

இலகுவில் மனம் புண்படும் தன்மையுடைய, உளத்தாங்குதிறன் குறைந்தவர்களே தற்கொலையில் அதிகம் ஈடுபடுகின்றனர். அதாவது சிறிய பிரச்சினையைக் கூட தாங்கிக் கொள்ள முடியாதவர்கள் தற்கொலைக்கு ஆளாகும் வாய்ப்பு அதிகம். இவர்கள் தமது பிரச்சினைகளை கையாள வழி தெரியாமல். பிரச்சினைச் சுமையிலிருந்து விடுபட தங்கள் உயிரை அழித்தல் ஒன்றே வழி என நினைக்கின்றனர்.

தங்களைப் பற்றியே எந்நேரமும் சிந்தித்துக் கொண்டிருப்பவர்களும், நடக்கும் எல்லாப் பிழைக்கும் தம்மையே குற்றவாளியாக நினைப்பவர்களும் இலகுவில் தற்கொலையில் ஈடுபடுகின்றனர்.

ஒன்றில் அதிகம் எதிர்பார்ப்பு வைத்திருந்து, அது நமக்கு கிடைக்கும் என்று அளவுக்கதிகமாக நம்பிக்கை கொண்டிருப்பது அது கிடைக்காமற் போகும் சந்தர்ப்பத்தில் ஏமாற்றம் தாங்க முடியாமல் தற்கொலையை நாடுகின்றனர். இந்த ஏமாற்றம் நபர் சார்ந்ததாகவோ அல்லது பொருள் சார்ந்ததாகவோ இருக்கலாம்.

தாங்க முடியாத கோபத்தில், மற்றவர்களைப் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் சிலர் தமக்குத்தாமே தண்டனை வழங்குகின்றனர். காதல் தோல்விகளின் போது மேற்கொள்ளப்படும் தற்கொலைகள் இவ்வகையைச் சார்ந்ததாக இருக்கும்.

தமது அன்பிற்குரியவர்களின் இறப்பினைத் தாங்கிக் கொள்ள முடியாதவர்கள் தமது உயிரையும்அழித்துக் கொள்கின்றனர். சிலர் நண்பர்களின் இழப்பினால் பாதிப்புற்று தனிமை தாழாமல் தற்கொலையில் ஈடுபடுகின்றனர்.

மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கும் ஆளுமையுடையவர்கள் (Attention seeking personality) பிறரின் கவனத்தைத் தம்பால் ஈர்த்துக் கொள்வதற்காக தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு இறுதியில் தாம் காப்பாற்றபட வேண்டும் என்று விரும்பியும் சிகிச்சை பலனின்றி இறந்து போகின்றனர்.

நண்பர்கள் அதிகம் இல்லாதவர்கள், எப்போதும் தனிமையின் கொடுமையில் வாழ்பவர்கள், உறவுகளால் கைவிடப்பட்டவர்கள் ஈடுபடுகின்றனர்.

பாதுகாப்பின்மை, குற்றவுணர்ச்சி, அவமானத்தை தாங்கிக் கொள்ள முடியாத நிலை, இயலாமை, பிறரால் தான் ஒதுக்கி வைக்கப்பட்டதான தவறாக புரிந்து கொள்ளப் பட்ட உணர்வு, மனஇறுக்கம். அடிக்கடி மாறும் மனநிலை, மனச் சோர்வு போன்றவையும் தற்கொலைக்கு காரணமாகின்றன.

## 4. சமூகம் சார்ந்தவை

குறைந்த சமூக உறவாடல் திறன்கள் கொண்டவர்கள் அதிகளவில் தற்கொலையில் ஈடுபடுகின்றனர். அதாவது சமூகத்துடன் இணைந்து செயற்பட முடியாதவர்களில், தம்மைச் சமூகத்திலிருந்து தனிமைப்படுத்திக் கொண்டவர்களில் தற்கொலைக்கான வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றது. சமூகத்தால் களங்கப்படுத்தபட்டவர்கள் அதைத்தாங்கிக் கொள்ள முடியாமல் தற்கொலையில் ஈடுபடுகின்றனர்.

தருத்தேற்றத்தினாலும் (Suggestion) தற்கொலை தூண்டப்படுகின்றது. அதாவது ஒருவர் மற்றவருக்கு தற்கொலை பற்றிய எண்ணத்தை ஊட்டுதல் இதுவாகும். ஒரு நபரால் மட்டுமன்றி திரைப்படங்கள், சின்னத் திரை நாடகங்கள், சஞ்சிகைகள் போன்றவற்றாலும் கருத் தேற்றம் நிகழலாம்.

## 5. பொருளாதாரம் சார்ந்தவை

வறுமையின் கோரப்பிடிக்குள் அகப்பட்டு, தமது அன்றாட வாழ்க்கையைக் கூட கொண்டு நடத்த இயலாதவர்கள் அதிகம் தற்கொலையில் ஈடுபடுகின்றனர். வறுமையால் தமது குடும்பத்தை காப்பாற்ற முடியாமல் போனவர்கள் தம்மை அழிப்பதற்கு முனைகின்றனர்.

கடன்சுமைகள் தாங்க முடியாமல் சாதாரண மானவர்கள் மட்டுமன்றி மிகப்பெரிய வர்த்தகர்களும் கூட தற்கொலையில் ஈடுபடுகின்றனர். இதன் போது இவர்கள் தமது குடும்பத்தைச் சற்றும் நினைத்துப் பார்ப்பதில்லை.

## 6. அரசியல் சார்ந்தவை

யுத்ததினால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள். உடமை இழப்புக்கள், என்பனவும் தற்கொலைக்கு காரணமாக அமைகின்றது. யுத்தத்தின் போது குடும்பத்தை இழந்தவர்கள், அங்கவீனமாக்கப்பட்டவர்கள், சித்திரவதைக்கு



உள்ளாக்கப்பட்டவர்கள், விதவைகளாக்கப்பட்டவர்கள், வன் புணர்ச்சிக்குள்ளாக்கப்பட்டவர்கள். நிர்க்கதிக்குள்ளன நிலையில் இருப்பதை விட இறப்பதே மேல் என தற்கொலையைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

சிலர் தமது இனத்தின் நன்மை கருதி, சில உரிமைகளை பெற்றுக் கொள்ள தமது உயிரைத் தற்கொலை மூலம் மாய்த்துக் கொள்கின்றனர்.

இவற்றைவிட தொழில் இழப்பு, பரீட்சைத் தோல்வி, அளவுக்கதிகமான மதுப் போதைப் பொருள் பாவனை, தங்க முடியாத உடல் நோய்கள் போன்றனவும் தற்கொலைக்கு காரணமாக அமைகின்றன.

தற்கொலை அபாயம் உள்ளவர்களில் பின்வரும் அறிகுறிகள் காணப்படும்.

1. குடும்பம், நண்பர்களுடன் தொடர்பாடலைப் பேணாமல் ஒதுங்கி வாழ்தல், தனிமையை நாடுதல்

2. அன்றாட கருமங்களில் ஆர்வமின்றி இருத்தல் உதாரணம் : கல்வி, தொழில், உணவு உண்ணல்

3. தற்கொலை பற்றியும், மரணம் பற்றியும் அதிகம் கதைத்தல்

உதாரணம்: நான் செத்தால் நல்லது, நான் செத்தால்

34 ஆம் பக்கம் பார்க்க....



# பிரமிட்

உலகின் தொன்மையான ஏழு அதிசயங்களில் ஒன்று பிரமிட். சீனப் பெருஞ்சுவரைப் போலவே நிலவிலிருந்து பார்த்தால் தெரியக் கூடியது. கிட்டத்தட்ட 5000 ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு இயற்கைச் சீற்றங்களை எதிர்கொண்டும், அதனால் எந்தவித பாதிப்புகளும் அடையாமல், தொன்மை உலகின் மர்மமான ஒரு சரித்திரத்தின் அடையாளமாக இன்றும் நிமிர்ந்து நிற்கிறது பிரமிட். இந்தப் பிரமிட்டுகளை உருவாக்கியது யார் என்ன காரணத்திற்காக இவற்றை உருவாக்கினார்கள்.

இந்தப் புதிரான கட்டிட அமைப்பில் ஒளிந்திருக்கும் ரகசியம் என்ன என்பது பற்றி விஞ்ஞானிகளிடையே பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. வரலாற்று ஆய்வாளர்கள் ஒன்றைக் கூற, விஞ்ஞானிகள் அதற்கு எதிராக ஒன்றைக் கூற என்று காலம் காலமாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. பிரமிட் என்றால் பலரும் சொல்வது , அது எகிப்தில் இருக்கும் ஒரு கட்டிடம். அதில் அக்காலத்தில் இறந்த மன்னர் போன்றவர்களின் சடலத்தைப் பாதுகாப்பாக வைத்திருக்கிறார்கள். ' மம்மி ' என்றழைக்கப்படும் அவற்றின் உடல்கள் இன்னமும் கெடாமல் இருக்கின்றன. அது தவிர பல்வேறு புதையல்களும் அங்கே இருக்கக்கூடும் என்பதுதான். ஆனால் இவை மட்டும் தான் பிரமிட்டா? வெறும் உடலைப் பாதுகாக்கும் சமாதியாகத் தானா அவ்வளவு பெரிய கட்டிடங்களைக் கட்டியிருப்பார்கள்? - என்ற கேள்விகள் சிந்தனைக்குரியன. இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் இந்தப் பிரமிட்டுகளைச் சுற்றி எந்தவிதமான மலைகளோ, பாறைகளோ, கற்குன்றுகளோ கிடையாது.

நகரத்தின் அருகில் மட்டுமல்ல, தொலைவிலும் கூட இல்லை. ஒரு புறம் பாலைவனமும், மறுபுறம் கடலும் தான் இந்நகரைச் சுற்றி உள்ளது. அப்படியானால் இந்தப் பிரமிட்டை எப்படி உருவாக்கியிருப்பார்கள், இத்தனை லட்சம் கற்களை எங்கிருந்து கொண்டு வந்திருப்பார்கள்.

இவ்வளவு பெரிய உயரத்திற்கு அவற்றை எப்படி எழுப்பியிருப்பார்கள் என்றுதான் வரலாற்று ஆய்வாளர்களும், விஞ்ஞானிகளும் ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர். மேலும் இந்த அளவுக்கு அருகில் பூமியில் எங்காவது கற்களைத் தோண்டி எடுத்த இடங்களில் மிகப் பெரிய பள்ளங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் பலமைல் சுற்றளவிற்கு அப்படி எந்த ஒரு பெரிய பள்ளமும் இல்லை. ஆகவே எப்படி இவற்றை உருவாக்கியிருப்பார்கள் என்று இன்னமும் விஞ்ஞானிகள் மண்டையை உடைத்துக் கொண்டுதான் உள்ளனர். பிரான்ஸ் நாட்டின் மாவீரராக இருந்த நெப்போலியன் இந்தப் பிரமிட்டுகளில் என்னதான் இருக்கிறது என்று பார்க்க ஆர்வம் கொண்டார். தனி ஆளாக ஓரிரவு முழுக்க இந்தப் பிரமிட்டில் தங்கினார். மறுநாள் காலை வெளிவந்த அவர், பிரமிப்பின் உச்சியில் இருந்தார். பிரமிட்டின் பல்வேறு ரகசியங்களைத் தெரிந்து கொண்டிருந்த அவர், அவற்றை முழுமையாக வெளியிடவில்லை. நான் சொல்வதை யாரும் நம்பமாட்டார்கள் என்ற கருத்தை மட்டும் தெரிவித்தார். ஒரு சிலர் இந்த வகைப் பிரமிட்டுகள் மனிதர்களால் கட்டப்படவில்லை, மனிதர்களை விடப் பல்வேறு அதிசய ஆற்றல்கள் கைவரப் பெற்ற வேற்றுக் கிரக மனிதர்களால் கட்டப்பட்டவை என்றும் கூறுகின்றனர்.

இந்தக் கூற்றில் உண்மை இருக்கலாம் என்று கூறும் ரஷ்ய விஞ்ஞானிகள், ஸ்பிங்ஸ் பிரமிட்டைப் போன்ற ஓர் பிரமிட் உருவச் சிலை செவ்வாய் கிரக பிரமிட்களுக்கு அருகே காணப்படுவதாகக் கூறியிருக்கின்றனர். அவர்கள், செவ்வாய்க் கிரகத்தில் சைடோனிக் எனக் குறிக்கப்படும் ஒரு பகுதியில் காணப்படும் பிரமிட் போன்ற அமைப்புகளுக்கும், எகிப்தின் பிரமிட்டுகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கக் கூடும் என்றும் கருதுகின்றனர்.

பிரமிட்டுகளின் மர்மங்கள் தொடர்கின்றன.








# CARGO
## SERVICES

Importers Exporters, Food Producers Forwarding & Clearing Agents Cargo Services to all Countries by Air & Sea, Courier Service, Sri Lankan Airlines Cargo Agent.

## G.T.V Enterprises (Pvt) Ltd.

**No: 18/3, Dr.E.A.Cooray Mawatha, Colombo 06.**
**Tel: 011 2360926, 011 2559849 Fax: 011 2631139**
**E-mail: gtvcourier@yahoo.com**




# கடவுள் எங்கே இருக்கிறார்?

நாத்திகவாதியான ஒரு தத்துவப் பேராசிரியர் கடவுளின் இருப்பைப் பற்றி வகுப்பறையில் விளக்கிக் கொண்டிருந்தார். கடவுளை அறிவியல் ஆணித்தரமாக மறுப்பதைப் பற்றிப் பேசிய அவர், ஒரு மாணவனை எழுப்பி கேள்வி கேட்கலானார்.

நீ கடவுளை நம்புவதாகச் சொல்கிறாய். இல்லையா?

நிச்சயமாக ஐயா...

கடவுள் நல்லவரா?

ஆம் ஐயா.

கடவுள் அளப்பரிய சக்தி படைத்தவரா?

ஆம்.

என்னுடைய சகோதரர் புற்றுநோய் காரணமாக இறந்துவிட்டார். தன்னைக் காப்பாற்ற கடவுளிடம் அவர் மனமுருகிப் பிரார்த்தனை செய்தபோதும் கடவுள் கைவிட்டு விட்டார். நாம் நோய்வாய்ப்பட்டோர்களுக்கு நம்மால் இயன்ற உதவியைச் செய்கிறோம். ஆனால் கடவுள் அவர்களைக் காப்பாற்றுவதில்லை..

பின் எப்படிச் சொல்கிறாய் கடவுள் நல்லவர் என்று?

(மாணவன் அமைதியாய் இருக்கிறான்)

உன்னால் பதில் சொல்ல முடியவில்லை. இல்லையா? சரி... நாம் மீண்டும் ஆரம்பிப்போம். கடவுள் நல்லவரா?

ஆம் ஐயா...

சாத்தான் நல்லவரா?

இல்லை.

எல்லாமே கடவுள் படைப்புத்தான் என்றால் சாத்தான் எங்கிருந்து வந்தார்?

கடவுளிடமிருந்துதான்.

சரி. இந்த உலகத்தில் கெட்டவை இருக்கின்றனவா?

ஆம்...

அப்படியென்றால் அவற்றை உருவாக்கியது யார்?

(மாணவர் பதில் சொல்லவில்லை)

இவ்வுலகத்தில் பசி இருக்கிறது. பஞ்சம் இருக்கிறது. மூட நம்பிக்கைகள் இருக்கின்றன. இவையெல்லாம் எங்கிருந்து வந்தன?

......

அறிவியல் சொல்கிறது. விஷயங்களைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு நமக்கு ஐம்புலன்கள் இருக்கின்றனவென. இப்போது சொல் கடவுளைக் கண்ணால் கண்டிருக்கிறாயா? அவர் பேசுவதைக் காதால் கேட்டிருக்கிறாயா? அல்லது வேறு எப்படித்தான் அவரது இருப்பை உணர்ந்திருக்கிறாய்?

.....

ஆனாலும் நீ கடவுளை நம்புகிறாய்?

ஆம் ஐயா...

நம் நடைமுறை வாழ்க்கையிலும் சரி, பரிசோதிக்கத்தக்க வகைகளிலும் சரி, ஆதாரங்களுடன் விளக்கக்கூடிய வழிமுறைக–ளிலும் சரி, எல்லாவற்றிலுமே அறிவியல் சொல்கிறது கடவுள் இல்லை என்று. இதற்கு நீ என்ன பதில் சொல்லப் போகிறாய்?

ஒன்றுமேயில்லை. எனக்கு நம்பிக்கை மட்டுமே உள்ளது.

ஹ்ம்ம்.. நம்பிக்கை... அதுதான் இப்போது பிரச்சினையே.... ஆசிரியர் பெருமூச்செறிகிறார்.

(இப்போது மாணவன் தன் வாதத்தை ஆரம்பிக்கிறான்)

ஐயா.. வெப்பம் அல்லது சூடு என்ற ஒன்று *உள்ளதா?*
நிச்சயமாக உள்ளது.
அதேபோல் குளிர் என்ற ஒன்றும் உள்ளதா?
நிச்சயமாக..
இல்லை ஐயா.... நிச்சயமாக குளிர் என்ற ஒன்று இல்லை.
(வகுப்பறை நிசப்தத்தில் ஆழ்கிறது.)

ஐயா.. வெப்பத்தில் பல வகைகள் உள்ளன. ஒவ்வொரு நிலை வெப்பத்திற்கும் ஒவ்வொரு பெயர் உள்ளது. மனித உடல் தாங்குவதற்கு ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையும், தண்ணீர் ஆவியாவதற்கு ஒரு வெப்பநிலையும், இரும்பு குழம்பாவதற்கு ஒரு வெப்பநிலையும் இருக்கின்றன. ஆனால் இதேபோல் குளிரை அளக்கமுடியுமா? வெப்பம் என்பது ஓர் ஆற்றல். குளிர் என்பது வெப்பத்திற்கு எதிர்பதம் அல்ல. வெப்பம் எனும் ஆற்றலின் இல்லாமையே குளிர் என்பது. (Absence of heat is the cold). வெப்பம் இல்லை. என்பதைத்தான் குளிர் என்று சொல்கிறோம். பூஜ்யம் டிகிரியும் குளிர்தான். பூஜ்யத்திற்குக் கீழே -240 டிகிரியும் குளிர்தான். இரண்டிற்கும் வித்தியாசம் கிடையாது.
(குண்டூசி விழும் சப்தம் கூட கேட்குமளவிற்கு அமைதியாயிருக்கிறது வகுப்பறை)

சரி.... இருட்டென்றால் என்னவென்று சொல்லுங்கள் ஐயா.... அப்படி ஒன்று உண்மையிலேயே இருக்கிறதா?

ஆமாம் தம்பி... இரவில் இருட்டாகத்தானே இருக்கிறது.


நீங்கள் மறுபடியும் தவறாகக் கூறுகிறீர்கள் ஐயா. இருட்டு என்பதே ஏதோ ஒரு இருப்பின் இல்லாமைதான். நீங்கள் வெளிச்சத்தை அளக்க முடியும். குறைந்த ஒளி, நிறைந்த ஒளி, கண்ணைக் கூசச் செய்யும் ஒளி எனப் பற்பல வகைகளில் வெளிச்சத்தைப் பிரிக்கமுடியும். அளக்கவும் முடியும். ஆனால் ஒளி என்பதே இல்லாவிட்டால் அதற்குப் பெயர்தான் இருட்டு. அதை அளக்க முடியாது. இல்லையா?

சரி தம்பி... நீ என்னதான் கூற வருகிறாய்?

ஐயா...நான் கூறுகிறேன். கடவுளைப் பற்றிய உங்கள் கருத்து பிழையானது.

பிழை? விளக்கிக் கூறமுடியுமா?

ஐயா, நீங்கள் எதிலுமே இரட்டை நிலைப்பாடு கொண்டிருக்கிறீர்கள். ஒன்று இருந்தால் அதற்கு எதிரிடையான ஒன்றும் இருக்கிறது என்பது உங்கள் வாதம். உதாரணத்திற்கு



நல்ல கடவுள், கெட்ட கடவுள், இருட்டு, வெளிச்சம், குளிர். நீங்கள் கடவுள் என்பவருக்கு ஒரு முடிவு, அல்லது எல்லை என்ற ஒன்று உண்டு என்பதாகக் கருதுகிறீர்கள். அதை நம்மால் அளக்க முடியவேண்டும் எனவும் வாதிடுகிறீர்கள். அறிவியல் மூலம் எண்ணங்கள் எப்படி உருவாகின்றன என்பதை உங்களால் விளக்கமுடியாது. எண்ணங்கள் உருவாவதே உடலினுள் கலக்கும் மின் மற்றும் காந்தத்தூண்டல்களினால்தான். மின்சாரத்தை அளக்க முடிந்த உங்களால் காந்தத்தன்மையை விவரிக்க முடிந்த உங்களால் எண்ணங்களின் தோற்றத்தை அளக்க முடியவில்லை.

இறப்பு என்பதை வாழ்வதின் எதிர்ப்பதமாகக் கருதுகிறீர்கள். உண்மையில் வாழ்வு இனி இல்லை. என்ற தன்மையே இறப்பு என்பதை அறிகிறீர்கள் இல்லையா... சரி இப்பொழுது சொல்லுங்கள் ஐயா... குரங்கிலிருந்து மனிதன் உருவானான். பேராசிரியர் பதிலுரைத்தார். உங்கள் கண்களால் மனிதப் பரிமாண வளர்ச்சியைக் கண்டிருக்கிறீர்களா? (பேராசிரியர் தன் தலையை இல்லை என அசைத்தவாறே புன்முறுவல் பூக்கலானார். விவாதம் செல்லும் போக்கை அறிந்தவராய்.) அப்படியென்றால், யாருமே மனிதப் பரிமாண வளர்ச்சியைத் தத்தமது கண்களால் கண்டதில்லை. எல்லாமே ஒருவகையான அனுமானம்தான். இன்னும் சரியாகச் சொல்லப்போனால் அது உங்கள் கருத்து குரங்கிலிருந்து மனிதன் உருவானான் என்பது. அதை நிரூபிப்பதற்கு நீங்கள் கொடுக்கும் ஆதாரங்கள் எவையுமே எவரும் கண்டதில்லை. அனுபவம் செய்ததில்லை என்பதே உண்மை. உங்களுக்குச் சரியெனப்படும் ஒன்றை எங்களுக்கு போதிக்கிறீர்கள், இல்லையா? எனவே, நீங்கள் ஒரு விஞ்ஞானியா அல்லது போதகரா? (மாணவர்கள் சீட்டின் நுனிக்கே வந்து விடுகிறார்கள்)

இங்கே யாராவது நம் பேராசிரியரின் மூளையைப் பார்த்திருக்கிறீர்களா?
(வகுப்பறை கொல் லெனச் சிரிப்பொலியால் அதிர்ந்தது)
யாராவது பேராசிரியரின் மூளையைத் தொட்டுப் பார்த்திருக்கிறீர்களா? அது இருக்கிறதென உணர்ந்திருக்கிறீர்களா? அதன் வாசனையை நுகர்ந்திருக்கிறீர்களா? உங்கள் ஐம்புலன்களும் என்ன சொல்கின்றன? அப்படியென்றால் நம் நடைமுறை வாழ்க்கையிலும் சரி, பரிசோதிக்கத்தக்க வகைகளிலும் சரி, ஆதாரங்களுடன் விளக்கக்கூடிய வழிமுறைகளிலும் சரி, எல்லாவாற்றிலுமே அறிவியல் சொல்கிறது, உங்களுக்கு மூளை இல்லை என்று. மூளையே இல்லாத நீங்கள் நடத்தும் பாடங்களை நாங்கள் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும் ஐயா? (மாணவனின் சரமாரிக் கேள்விகளால், வகுப்பறையில் அமைதி நிலவுகிறது. ஆசிரியரின் முகமோ வெளிறிப் போனது )

நீ எனக்கு மூளை இருக்கிறதென நம்பித்தான் ஆகவேண்டும் தம்பி!

அதுதான் ஐயா.... இவ்வளவு நேரம் நான் சொல்ல வந்தது. மனிதனையும் கடவுளையும் இணைக்கும் ஊடகத்தின் பெயர்தான் நம்பிக்கை என்பது. இதுதான் உலகத்தில் சகலவற்றையும் இயக்கிக் கொண்டிருப்பது. நம்பிக்கை இல்லையேல் வாழ்க்கை இல்லை..

இவ்வாறாக விவாதம் நிறைவுற்றது.

**இப்போது சொல்லுங்கள்!!**
**கடவுள் எங்கே இருக்கிறார்?**
**பதில் உங்களிடமே!!!!**

# மெஸ்மரிசம் - ஹிப்னாடிசம் ஒரு ஒப்பீடு



## ஹிப்னாடிசத்தின் வரலாறு என்ன?

ஹிப்னாடிசம் என்ற சொல் கி.பி. 1000ம் ஆண்டுகளின் நடுப்பகுதிவரை பிரபலமாகவில்லை. ஆனால் ஹிப்னாடிசம் என்று வழங்கப்படும் சொல்லிற்கான பொறிமுறை, அதாவது உணர்வு மாறல் நிலை இந்திய கலாச்சாரத்திலும், எகிப்திய கலாச்சாரத்திலும் இருந்ததற்கான சான்றுகள் தாராளமாக உண்டு. இதன் வரலாறு பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள். எமது புராண இதிகாசங்கள், மந்திர சாஸ்திரங்கள், சித்தர் பாடல்கள் என அனைத்திலும் இதன் பிரயோகம் உண்டு.

இதேபோல் எகிப்திய கலாச்சாரத்திலும் ஹிப்னாடிசம் தொடர்பான குறிப்புக்கள் சூரியனைப்பார்த்து உணர்வு மாறிய நிலையினை (Altered stare of consciousness) அடைதல் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன.

இனி மெஸ்மரிசத்தின் வரலாற்றிற்கு வருவோம். மெஸ்மரிசம் கி.பி 1500 களில் ஐரோப்பியாவில் பாரசெல்சியஸ் என்பவர் உடலில் காந்தங்களைக்கொண்டு நோய்களைக் குணப்படுத்தி வந்தார், பின்னர் அதனை கி.பி 1700 களின் மெஸ்மர் என்பவர் தனது ஆராய்ச்சிக்காக எடுத்துக் கொண்டார். மெஸ்மர் தனது ஆராய்ச்சிக்கு நியூட்டனின் புவியீர்ப்பு விதியினை அடிப்படையாக கொண்டார். அதாவது திணிவுள்ள பொருட்கள் மீது பூமி ஈர்ப்புச் செய்வது போல் மனிதன் மனம் மீது எப்படி செல்வாக்கு செலுத்துகிறது என்பதுதான் அவரது வாதத்தின் அடிப்படை இந்த வாதப்பகுதியினை நோக்குங்கள், பாரதத்தில் இந்த ஆராய்ச்சிகளையெல்லாம் எப்போதோ ரிஷிகளும், யோகிகளும் முடித்து யோக சூத்திரமாகவும், ஆன்ம ஞானமாகவும் எழுதி வைத்துவிட்டார்கள் இந்த அடிப்படையில் மெஸ்மர் தனது ஆராய்ச்சியில் மனிதனை, மிருகங்களைச் சுற்றி ஒரு காந்தப்புலம் இருப்பதாக அறிந்தார், அந்த காந்தப்புலதிற்கு மிருக காந்தப்புலம் என பெயரிட்டார்.

நூற்றுக்கணக்கான மக்களை மெஸ்மர் தனது காந்த சக்தியினால் குணப்படுத்தியதுடன், அக்கால அறுவை சிகிச்சைக்கு மயக்க நிலைக்கு கொண்டு செல்வதற்கும் பயன்படுத்தினார். கி.பி. 1734 இல் 16ம் லூயி மன்னன் மெஸ்மரது வழிமுறைகளை ஆராய்வதற்கு ஒரு குழு அமைத்தான். இது பெஞ்சமின் பராங்கிளின் ஆல் தலைமை தாங்கப்பட்டது.

இந்தக்குழு மெஸ்மரது வாதங்களையும் அனுபவங்களையும் கேட்டறிந்து, மெஸ்மரால் அவரது கண்டுபிடிப்புக்கு பௌதீக ஆதாரம் எதனையும் வழங்க முடியவில்லை. ஆனால் அந்தக் குழு மெஸ்மரது வாதங்களை புறந்தள்ளவில்லை, ஆதலால் மெஸ்மரது கருத்துக்கள் மேலும் செல்வாக்குப் பெற்றன. அதன் பின் இந்தக்கலை அவரது பெயரால் மெஸ்மரிசம் என அழைக்கப்பட்டது. மெஸ்மரிசம் என்பது ஒருவர் தனது ஜீவ காந்த சக்தியினை மற்றவர்களுக்கு செலுத்தி குணப்படுத்தும் கலையாகும். சரியாகச் சொன்னால் ரெய்கி எனப்படும் ஜப்பானிய கலையின் மேற்கத்தைய வடிவந்தான் மெஸ்மரிசம். இது வர்ம சாஸ்திரத்தில் கூறப்படும் நோக்குவர்மத்தினது அடிப்படையும்தான். ஆனால் நோக்கு வர்மத்தின் அடிப்படை தத்துவங்களுடன் ஒப்பிடும் போது மெஸ்மரிசம் ஒரு குளிதான். நாம் எமது சுதேச அறிவியல் (indigenous science) தெரியாததால் தான் நோக்கு வர்மத்தினை மெஸ்மரிசத்துடன் ஒப்பிடுகிறோம்.

சரி விடயத்திற்கு வருவோம்: மெஸ்மரிசம் பின்னர் கி.பி 1843 இல் ஜேம்ஸ் பிராயிட் எனும் வைத்தியரால் ஆராய்ச்சிக்கு உட்பட்டு ஹிப்னோசிஸ் என பெயரிடப்படுகிறது. பின்னர் இந்த ஹிப்னோசிஸ் சிக்மண்ட் பிராயிடினால் தனது சைக்கோ அனாலிஸிசிற்கு ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, எல்லாப் பிரச்சனைக்கும் மனிதனது காம அனுபவம்தான் மறை மனதில் தாக்கத்தினை ஏற்படுத்தி உண்டுபண்ணுகிறது என தனது கொள்கையினை வகுக்கின்றார். இவரது கொள்கையின் படி ஹிப்னாடிசத்தின் செல்வாக்கு வீழ்ச்சியுற ஆரம்பிகிறது. இதன் பின் கி.பி 1920 களில் ஆட்டோ சஜஸன் (auto suggestion) எனும் சுய ஹிப்னாடிசம் ஆரம்பமாகிறது. இறுதியான ஹிப்னாடிச ஆராய்ச்சி முடிவுகளின் படி ஹிப்னாடிச நிலைக்கு ஆட்படுபவரின் விருப்பத்தின் பெயரிலேயே ஹிப்னாடிசம் செய்ய முடியும் என்பதாகும். உதாரணத்தின் மூலம் விளங்கிக்கொள்வதானால் பிறவியிலேயே சைவ உணவுப்பழக்க முடையவரை ஹிப்னாடிச தூக்கத்தில் ஆட்படுத்து மாமிசம் சாப்பிடச் சொன்னால் அவர் நிச்சயமாக உண்ணமாட்டார்: ஆதலால் ஒருவர் தன் சுய விருப்பத்தின் பெயரில் மட்டுமே ஹிப்னாடிசத்திற்கு ஆட்பட முடியும். ஆகவே சித்தர்கள் குறிப்பிடும் நோக்கு வர்மத்திற்கும் ஹிப்னாடிசத்திற்கும் எந்த வித நேரடித்தொடர்புமில்லை, ஹிப்னாடிசம் ஆழ்மனதாகிய சத்தத்திற்கு (Subconscious mind) ஒரு தகவலைக்கொடுக்கும் பொறிமுறை, மெஸ்மரிசம் என்பது பிராணசக்தியின் மற்றவர் மேல் பாய்ச்சி குணப்படுத்தும் பொறிமுறை, நோக்கு வர்மம் சித்த சக்கதியிணையும் இணைத்து மற்றவர் தாக்க பயன்படும் ஒரு போர்க்கலை. நோக்குவர்மம் பிராண சக்தி, தாரணா சக்தி எனப்படும் சித்த ஏகாக்ர நிலை ஆகிய இரண்டு அடிப்படையில் செயற்படுவது. அடுத்தது வர்மப் பிரயோகம் தெரிய பூரணமாக சரகலை (வாசி யோகமும்) தெரிய வேணடும். குறித்த நேரத்தில் பிராணன், மற்றும் தச வாயுக்கள் உடலில் எங்கு நிலை கொள்ளுகிறது என்பது தெளிவாக தெரிய வேண்டும்.

**Computer & Laptop Sales, Computer Accessories, Computer & Laptop Repairs, Software Installation, Networking, ADSL Installation, Door To Door Mobile Services**

hp DELL TOSHIBA COMPAQ acer



## BRAND NEW | BEST PRODUCT

Experience a new dimension with
HP Entertainment Notebook PC's,
Get the best of games, music, photos
and videos and redefine your idea of fun.




உங்கள் அனைத்து விதமான கணனித் தேவைகளுக்கும் நாடவேண்டிய இடம்.....

# i7 COMPUTERS

164/7B, Galle Road, Soysapura, Moratuwa.
Tel/Fax: 0112623418 Mobile: 0777683676 Email: i7c@sltnet.lk
www.i7c.com

உளவியல் துறையில் நிபுணத்துவம் பெற்ற 25 வருடங்களுக்கும் மேலாக அளப்பரிய சேவையாற்றி வரும் அருட்தந்தை டேமியன் அடிகளாரின் அனுபவப் பகிர்வுகளும் ஆக்கபூர்வமான கருத்துக்களும் உங்கள் வினாக்களுக்கான பதில்களாக தொடர்ந்து வரவிருக்கிறது. உளவியலின் முக்கியத்துவம் அறிந்து வாசகர்களின் வினாக்களுக்கு தொடர்ந்தும் பதில் தருவதற்கும் அருட்தந்தை அவர்கள் தமது மனப்பூர்வமான சம்மதத்தைத் தெரிவித்திருந்தார். எனவே எமது அடுத்து வரும் இதழ்களுக்கான வாசகர்களின் வினாக்கள் வரவேற்கப்படுகின்றன.



# அருட்தந்தை டேமியன் அடிகளார் பதில்கள்

எனக்கு 2 1/2 வயதில் ஆண்குழந்தை ஒன்று உள்ளது. இக் குழந்தை பிற தனது வயதுக் குழந்தைகளுடன் விளையாட ஆர்வம் காட்டுவதில்லை. (தன்வயது சிறுவர்களை பிடிப்பதில்லை) வயது வந்தவர்களைத்தான் கூடுதலான நாட்டம் கொள்கின்றார். அது மட்டுமல்லாமல் சில சமயம் building blocks or பிற விளையாட்டுப்பொருட்களை எடுத்து சிலரிற்கோ, சில பொருட்களின் மீதோ தொடர்ச்சியாக வீசுகின்றார். செய்யவேண்டாம் என்று கூறினாலும் அதை மறுபடி மறுபடி செய்கின்றார். இது சாதாரணமான குழந்தையின் நடத்தையா?

இந்த வயதில் உள்ள குழந்தைகள் தமது வயதை ஒத்தவர்களுடன் விளையாடுவதே சாதாரணமான வளர்ச்சி. இங்கு அக்குழந்தை எதற்காக பெரியவர்களுடன் விளையாட முனைகிறார் என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். அக்குழந்தையின் மனதில் ஏதோ ஒரு தாக்கம் இருப்பதால்தான் கோபம் கொள்கிறான். தனது வயதினையொத்தவர்களுடன் விளையாடும் பொழுதோ அல்லது வேறுகாரணத்தினாலோ ஏற்பட்ட தாக்கத்தைக் கோபம் மூலம் வெளிப்படுத்துகிறார். அதாவது அந்தக் கோபத்தை வெளிக்காட்டுவதற்காகவே அவன் அவ்வாறு பொருட்களை வீசுகிறான். சிலவேளைகளில் விளையாடித் தோற்றிருக்கலாம். அல்லது தான் யாவற்றிலும் முதன்மை வகிக்க வேண்டுமென நினைக்கலாம். இதற்காக அவன் வேறு பொறி-முறைகளை கையாள பார்க்கிறான். இதன் விளைவுதான் பொருட்களை வீசுதல். பெற்றோர் அவரைச் சரியாகக் கவனித்து அவரது அந்தக் கோபத்திற்கான காரணத்தினை, தாக்கத்தினை கண்டறிந்து சரியான அறிவுரையை வழங்கவேண்டும்.

நான் ஒரு Middle age பெண்மணி பொதுவாகவே எனது சுபாவம் யாருக்கும் கெடுதல் செய்ய நினைப்பதில்லை. பல சமயம் கடினவார்த்தை கூட சொல்ல விரும்புவதில்லை. பிறர் செய்யும் அநியாயம், நம்பிக்கைத் துரோகம், பொய், சமுதாயத்திற்குப் பொருந்தாத நடத்தை இவை எனக்கு கோபத்தினை மட்டுமல்லாது கவலையையும் ஏற்படுத்துகின்றது. இதன்விளைவு எனக்கு நெருக்கமானவர்கள் பிழை செய்யும்போது அந்தக் கோபம் எல்லாம் சேர்ந்து ஒருவர் மீது கொட்டி மிகதீவிரமாக சாதாரண மனிதர் செய்வதனை விடக் கேவலமான வார்த்தைப் பிரயோகத்தினைக் கூட சாதாரணமாக சொல்லிக் கொட்டித் தீர்க்கின்றேன். கோபம் குறைந்ததும் இதை நானா செய்தேன் என்று கேட்குமளவிற்கு இருக்கின்றேன். இவ்வாறான நடத்தை சரியா? பிழையா? இதனால்
நான் எனது உறவுகளைக் கூட விட்டுவிலகி வருகின்றேன். இதற்கு என்ன செய்யலாம்?

கோபமானது வாழ்க்கையில் மிக முக்கியமான ஒரு பகுதிதான். குறிப்பிட்ட பெண்மணி மென்மையான போக்கையுடையவர் என்பது அவரது வினாவிலிருந்து தெரிகிறது. அநீதியைத் தட்டிக் கேட்க மனம் வந்தாலும் தட்டிக்கேட்க முடியாதிருந்த சூழ்நிலை நெருக்கமானவர்கள் மீது வெளிப்படுத்தப்படுகிறது. உரியவர்களிடம் அந்தக் கோபத்தை வெளிப்படுத்துவதில் தப்பில்லை. மாறாக அந்தக் கோபத்தைக் குறைந்த வலுவுள்ள ஒருவர் மீதோ, தவறு செய்யாத ஒருவர் மீதோ, சந்தேகத்தை மட்டும் கொண்டோ வெளிப்படுத்துவது ஆரோக்கியமானதல்ல. இந்த நிலையை ஆங்கிலத்தில் Passive Aggresive Personality என்று சொல்வார்கள். வாழ்க்கையின் ஒரு பகுதியான கோபத்தைத் வெளிப்படுத்துவதில் தான் சிக்கல் ஏற்படுகிறது. எனவே பிரச்சினையை கையாளும் விதம் மற்றையவர்களுக்கு இடையூறாக இல்லாமல் ,ஆக்ரோஷமாக இல்லாமல் இருப்பதே ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்குச் சிறந்ததாகும்.

எனக்கு 60 வயது ஆண். இப்பொழுது எனக்கு அடிக்கடி கோபம் வருகின்றது. நான் வேலை செய்யும் காலத்தில் பொறுமையாகவும் எந்த வேலை செய்தாலும் Perfect ஆகவும் செய்வேன். அடிக்கடி சினம், கோபம் வருகின்றது. குடும்பத்தவருடன் கடுப்பாகவும் இருக்கின்றேன். இரவில் அமைதியாக நித்திரை கொள்ள முடியவில்லை. ஏதாவதொரு காரணத்தினை வைத்து மற்றவர்களுடன் பெரிதாக வாக்குவாதப் படுகின்றேன். இது எனக்கு பிடிக்காவிடினும் தவிர்க்க முடியவில்லை. ஏன் இந்த நிலைமை? சாதாரண மனநிலைக்கு வர என்ன செய்யவேண்டும் நான்?

இந்த ஆணின் கோபத்திற்கு முக்கிய காரணம் இவர் வேலை செய்யும் வேளையில் ஒழுங்கு முக்கியம் என்பதை கடைப்பிடிப்பவர் யாராக இருந்தாலும் சரியாக செய்யவேண்டும் என்று எதிர்பார்ப்பவர் வேலையின் முக்கியத்துவத்தை உணர்ந்து வெளிப்படுத்த முடியாத கோபத்தை, அடக்கிவைத்த கோபத்தை இப்போது வெளிப்படுத்துகிறார். இதனால்தான் உறவுகளில் சிக்கல் ஏற்படுகிறது. ஆரோக்கியமான குடும்ப வாழ்க்கைக்கு இது நல்லதல்ல. எனவே பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து பார்க்க வேண்டும். தூக்கத்திற்கு செல்வதற்கு முன் தனது சிக்கல்களை வெளியே யாரிடமாவது உரிய முறையில் கொட்டித் தீர்த்துவிட்டு நிம்மதியாக நித்திரைக்குச் செல்லவேண்டும்.

உண்மையை அறியாமல் ஒருவரை குற்றம் சொல்வது அந்த உண்மையின் அழகையே பாதிக்கும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.


TRAVEL DATA
Tours & Travels (Pvt) Ltd
SriLankan
எங்கள் சேவையின்
இரகசியம்
உங்களின்
திருப்திகரமான பயணமே
No. 09, School Lane, Galle Road, Colombo 03, Sri Lanka.
Tel: 2598777 / 2599488 Fax: +94 11 2580866

25 ஆம் பக்க தொடர்ச்சி....

# தற்கொலை......

ஒருத்தருக்கும் பிரச்சினை இல்லை எனக் கூறுதல் ஏற்கனவே தற்கொலை முயற்சியில் ஈடுபட்டிருத்தல் தற்கொலை செய்யப் போவதாக நேரடியாக அச்சுறுத்தல் விட்டவர்கள் மது, போதைப்பொருள் பாவனையில் அதிகம் ஈடுபடல் குடும்பத்தில் ஏற்கனவே யாராவது தற்கொலை மூலம் இறந்திருத்தல் எதிர்மறையான சிந்தனைகளைக் கொண்டிருத்தல் தனிமையில் இருந்து அழுதல், அழ முடியாமல் தவித்தல் தமது உணர்வுகளை வெளியே காட்டாமல் இருத்தல் பாலியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்கள் உதாரணம்: வன்புணர்ச்சி, கருக்கலைப்பு சுய வெறுப்பு, குற்ற உணர்வு, வெட்க உணர்வு தம்மைப் பற்றிய தாழ்வான மதிப்பீடு, சடுதியான ஆளமை மாற்றங்கள் போன்றன.

எனவே இவர்கள் குறித்து பெற்றோரும் நண்பர்களும் அதிக கவனம் செலுத்துவது அவசியமாகும். ஏற்கனவே தற்கொலை முயற்சியில் ஈடுபட்டவர்கள் குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும். அவர்களை தனிமையில் விடுவதைத் தவிர்க்கவும்.

தற்கொலையை எதிர்காலத்தில் குறைப்பதற்கான வழிமுறைகள்

**1. தற்கொலை எண்ணம் உடையவர்களை இனங்காணல்**

பெரும்பாலானவர்கள் தமது தற்கொலை எண்ணத்தை மிக நெருங்கியவர்களிடம் மறைமுகமாகவோ நேரடியாகவோ கூறவே செய்கின்றனர். எனவே இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்கள் பாராமுகமாக இருத்தாமல் தலையீடடை மேற்கொண்டு தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். அவர்கள் குறித்து எந்நேரமும் அவதானமாயிருப்பதுடன் தற்கொலை ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய பொருட்கள் அவர்களுக்கு கிடைக்கா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**2. பிரச்சினை தீர்த்தல் திறன்களை கற்றுக் கொடுத்தல்**

பிரச்சினை ஏற்படும் போது அதனை எவ்வாறு ஆரோக்கியமான முறையில் கையாள்வது என்பது தெரிவதில்லை. எந்தப் பிரச்சினைக்கும் தற்கொலை தீர்வாக அமைய மாட்டாது என்பதனை இவர்கள் உணரவேண்டும். எனவே ஆரோக்கியமான பிரச்சினை தீர்க்கும் திறன்களைக் கற்றுக் கொடுத்தல். அதிலிருந்து விடுபடுவதற்கான திகச் சிறந்த வழியாக அமையும் பிரச்சினையொன்று ஏற்படும் போது அதனை ஆரம்பத்திலேயே தீர்க்க முற்படல் அந்தப் பிரச்சினையை பூதாகாரமாக உருவெடுக்காமல் இருக்க உதவும்.

**3. குடும்ப உறவுகளை ஆரோக்கியமாகப் பேணல்**

பல தற்கொலைகளுக்குக் கணவன் மனைவியிடையே சரியான புரிந்துணர்வின்மை, பெற்றோர் பிள்ளைகள் உறவில் அதிக இடைவெளி போன்றவையே அடிப்படைக் காரணங்களாகும். எனவே சரியான புரிந்துணர்வு, சரியான தொடர்பாடல், கலந்துரையாடல்கள், பேசித் தீர்த்தல் போன்ற ஆரோக்கியமான முறைகளினூடாக தற்கொலை என்ற விபரீத முடிவைத் தடுக்கலாம்.

**4. தனிமையை விலக்குதல்**

நல்ல நண்பர்களை உருவாக்கிக் கொள்வதன் மூலம் தனிமையைத் தவிர்க்கலாம். அதாவது மனச்சுமை, மனப்பாரத்தை இறக்கி வைப்பதற்கு ஒரு நல்ல நண்பனையாவது உருவாக்கிக் கொள்ளவேண்டும். பலருக்கு கசப்பான சம்பவங்கள் ஏற்படும் போது அதனைப் பகிர்ந்து கொள்வதற்கு உற்ற நண்பாக்ள இருப்பதில்லை. இவ் அனுபவங்களைத் தமக்குள்ளேயே போட்டு அடக்கி இறுதியில் துன்பச் சுமை தாளாமல் தற்கொலையில் ஈடுபடுகின்றனர்.

தனிமையைத் தவிர்க்க நல்ல பொழுதுபோக்கு அம்சங்களில் ஈடுபடுதல், அதாவது நல்ல மனதுக்கு ரம்மியமான இசையை ரசித்தல். தொலைக்காட்சி பார்த்தல், இயற்கையை ரசித்தல், கவிதை எழுதுதல் போன்றன மிகவும் பயனுடையதாக அமையும்.

**5. உள ஆற்றுப்படுத்தல் அல்லது உளவளத் துணையை நாடுதல்**

பிரச்சினை ஏற்படும் போது அதனைப் பகிர்வதற்கு நம்பிக்கைக்குரியவர்கள் இல்லாதவிடத்து அந்தரங்கமான பிரச்சினைகள் அம்பலமாக்கப்படும் என நினைக்குமிடத்து தகுந்த உள ஆற்றுப்படுத்தல் சேவையை நாடுதல் மிகவும் பயனுடையதாக அமையும். இதன்போது பிரச்சினையிலிருந்து விடுபட வழி கிடைப்பதுடன் வாழ்க்கை மீதான நம்பிக்கையும் அதிகரிக்கும். யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் உளஆற்றுப்படுத்தல் சேவையை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அகவொளி குடும்ப ஆற்றுப்படுத்தல் நிலையம், சாந்திகம் நிறுவனம் போன்றவற்றிலிருந்தும் அருட்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின், அருட் தந்தை ராஜநாயகம் போன்றோரிடத்தும் பெற்றுக் கொள்ளலாம். இலங்கையைப் பொறுத்த வரை தற்கொலைத் தவிர்ப்பிற்காக ஸ்ரீலங்கா சுமித்திரயோ எனும் நிறுவனம் பல்வேறுபட்ட இலவச பணிகளை ஆற்றிவருகின்றது. இதன் கிளைகள் நாட்டின் பல்வேறுபட்ட இடங்களிலும் அமைந்துள்ளது.

**6. ஆன்மீகம் சார் விடயங்களில் ஈடுபடல்**

மனச்சுமை நீக்கும் அருமருந்து, ஆன்மீகம், பிரச்சினை அதிகமாகும் போது ஆன்மீகத்தில் அதிக நாட்டம் செலுத்துதல், பிரச்சினையைக் குறைக்க மிகவும் சுலபமான வழியாகும். ஆலயத்திற்குச் சென்று இறைவனை வழிபடுதல், இறை பாசுரங்களை மனமுருகப் பாடுதல், குறைகளை இறைவனிடம் சொல்லி அழுதல் போன்றவை மனப் பாரத்தை வெகுவாகக் குறைக்கும். இதன் மூலம் தற்கொலை என்ற கொடிய நோய் அணுகாமல் பார்த்துக் கொள்ளலாம்.

**7. சாந்த வழிமுறைகளைக் கையாளல்**

தியானம், யோகாசனம் போன்றவற்றில் ஈடுபடுதல், மனக்குழப்பம், மனச்சஞ்சலம் என்பவற்றைப் போக்கி மனதை ஒருநிலைப்படுத்த உதவுகின்றது. இவற்றில் ஈடுபடுதல் தற்கொலைக்கான வாய்ப்பைக் குறைப்பதற்கான வழிமுறையாக அமைகிறது.

**8. விழிப்புணர்வை ஏற்படுத்தல்**

தற்கொலை அபாயம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குளை நடாத்தல் தற்கொலையைக் குறைப்பதற்கான மிகச்சிறந்த வழியாகும். இதனை பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், வேலைத்தளங்கள், கிராமங்கள் போன்ற பல்வேறுபட்ட மட்டங்களும் மேற்கொள்ளவேண்டும். இதற்கு பொருத்தமான வளவாளர்களையும், உளஆற்றுப்படுத்துநர்களையும் பயன்படுத்த வேண்டும். ஊடகங்களும் தற்கொலையைக் குறைப்பதற்கு தற்கொலை சம்பந்தமாக விழிப்புணர்வுச் செய்திகள், நாடகங்கள், திரைப்படங்கள் என்பவற்றை காட்சிப்படுத்த வேண்டும்

முடிவு: வலியில்லாமல் வாழ்க்கையில்லை. எந்தக் காயத்தையும் காலம் என்னும் மருந்து ஆற்றிவிடும். எனவே எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வாக தற்கொலை முடிவு அமையமாட்டாது என்பதை சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் உணர வேண்டும். தற்கொலை என்பது ஒரு கணநேரத்தில் எடுக்கும் முடிவு. அந்தக் கணநேரத்திலிருந்து வெளியே வந்துவிட்டால் போதும். நீ தோற்றுப் போகலாம் ஆனால் அதன் முடிவு வெற்றி சாத்தியமற்றது என்பதல்ல என்பதை உணர்ந்து வாழும்வரை போராடினால் வாழ்க்கை என்பது மிகவும் சுவாரஸ்யமானதாக அமையும்.

ஸ்ரீலங்கா சுமித்திரயோ
கொழும்பு கிளை
No: 60B, ஹோட்டன் இடம்,
கொழும்பு 07
தொலைபேசி 011 2682535
இணையத்தளம்
www.srilankasumithrayo.org

### விக்கல் என்றால் என்ன?

டயாஃப்ரம் (Diaphragm) என்கிற தோல் போன்ற ஒரு தசை நமது மார்பகத்துதில் இருக்கிறது. நாம் ஒவ்வொரு முறை சுவாசிக்கும்போது இந்த தோல் பகுதியானது சுருங்கி விரிகிறது! அதாவது, சுவாசத்தை உள்ளிழுக்கும்போது சுருங்கி, பின் சுவாசத்தை வெளியே விடும்போது தளர்வடைகிறது / விரிகிறது. அதெல்லாம் சரி, விக்கலுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?

விக்கல் என்பது அடிப்படையில் டயாஃப்ரம் (Diaphragm) எனும் தோலின் சுருங்குதலே ஆகும்! டயாஃப்ரம் சுருங்குவது / சுவாசிப்பதற்கான காரணம் ஃப்ரெனிக் நெர்வ்ஸ் (phrenic nerves) என்னும் ஒரு வகை நரம்புகள்! இந்த நரம்புகளில் திடீரென்று ஏற்படும் ஒருவித எரிச்சல் (irritation) காரணமாக டயாஃப்ரமானது திடீரென்று வேகமாக சுருங்குவதால், அதிகப்படியான காற்று நம் நுரையீரலினுள் செல்கிறது. இதை சமாளிக்க / தவிர்க்க, எபிக்லாட்டிஸ் என்னும் சுவாசக்குழாயின் மூடியானது படக்கென்று மூடிக் கொள்கிறதாம்.

35 ஆம் பக்கம் பார்க்க....

5 ஆம் பக்க தொடர்ச்சி....

# போதிதர்மன் ....

எதுவும் கிடைக்காது. நரகத்தைத் தவிர என்றார் போதிதர்மர்.

நான் என்ன தவறு செய்தேன். நல்லது செய்தவனுக்கு நரகமா? புத்தத் துறவிகள் சொல்கிற புனித காரியங்களை எல்லாம் நான் செய்து கொண்டிருக்கிறேன்! என்றான்.

உன்னுடைய சொந்தக் குரலை நீ கேட்காதவரை யாராலும் உனக்கு உதவ முடியாது. உனக்குளிருந்து ஒலிக்கும் குரலை நீ கேட்டதில்லை. அதைக் கேட்டிருந்தால் இப்படியொரு முட்டாள்தனமான கேள்வியை நீ கேட்டிருக்க மாட்டாய், என்றார் போதிதர்மர்.

பேராசை கொண்ட மனதுக்குப் பிரதியாய் புத்தர் எந்தவொரு வெகுமதியும் தருவதில்லை. புத்தரின் போதனைகள் எல்லாமே ஆசையின்மை பற்றியதுதான் என்றார்.

தாங்கள் சொல்கிற உள்ளிருந்து ஒலிக்கும் குரலை நான் கேட்டதில்லை. எனக்குள் எழுகிற எண்ணங்களால் ஏற்படும் ஓயாத இரைச்சலில், நான் அதைக் கேட்கத் தவறிவியிருப்பேன். அந்தவகையில் தாங்கள்தான் எனக்கு உதவ வேண்டும். என்று கேட்டுக் கொண்டான் வூ அரசன்.

அப்படியானால் விடியற்காலை நான்கு மணிக்கு நான் தங்கியிருக்கும் இடத்துக்கு நீ வந்துவிடு. உன்னோடு மெய்காப்பாளர்களைக் கூட அழைத்து வரக்கூடாது. என்றார் போதிதர்மன்.

அதிகாலை நான்கு மணிக்கு வூ அரச்ன அங்கே சென்ற போது, அவருக்கு முன்பாக போதிதர்மர் அந்த இடத்துக்கு வந்துவிட்டார். அவருடைய வருகையில் கப்பு ஒன்று இருந்தது.

கம்பை வைத்துக்கொண்டு இவர் ஒரு மனதை அமைதிப்படத்தப் போகிறார் என்று எண்ணிக் கொண்டான் அரசன்.

ம்.. இந்தத் கோவில் முற்றத்தில் உட்காந்துகொள், அதட்டலாக கூறினார் போதிதர்மர். அவனும் அப்படியே அமர்ந்தான்.

உனது கண்களை மூடிக்கொள். உனக்கு முன்பாக எனது கையில் கம்புடன் நான் அமர்ந்திருக்கிறேன். உனது கண்களை மூடிக் கொண்டாயா? அது எங்கே இருக்கிறது என்று கண்டுபிடி. மேலும், மேலும் உள்நோக்கிச் செல். அதை கண்டுபிடித்து, அது இங்கே இருக்கு என்று எனக்குச் சொல். மற்றதை என் கையில் உள்ள கம்பு பார்த்துக் கொள்ளும், என்றார் போதிதர்மர்.

மெய்ப்பொருளை அல்லது அமைதியைத் தேடுகிற எவரும் அந்தகைய அனுபவத்திற்குள்ளாகியிருக்க மாட்டார்.

அரசன் உள்நோக்கிப் பயணித்தான், தன் மனதைக் காண முயன்றான். ஆனால், அதை அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

இதோ இருக்கிறது என்றோ எதுவுமே இல்லை என்றோ சொல்வதற்கு அவன் அஞ்சினான்.

மனித சஞ்சாரமற்ற இந்த இடத்தில், போதிதர்மர் என்கிற இந்த அபாயகரமான மனிதன் தன்னை எதுவும் செய்யக்கூடும். சுற்று வட்டாரத்தில் யாரும் இல்லை: தன்னிடம் எந்தவொரு ஆயுதமும் இல்லை. இப்படியான எண்ண ஓட்டம் கலக்கத்தைத் தந்தது, வூ அரசனுக்கு.

நேரம் ஓடியது. நிசப்தமான மலைப்பகுதியில் இளங்காற்று வீசியது. சூரிய ஒளி எங்கும் பரவத் தொடங்கியது.

போதிதர்மர் உறுமினார்.

எவ்வளவு நேரம் இன்னும் மனதைக் கண்டுபிடிக்கவில்லையா? என்றார்.

உமது கையிலுன்ன கம்பைப் பயன்படுத்தாமலே என்னுடைய மனதின் இரைச்சலை அகற்றி விட்டீர்! என்றான் வூ அரசன்.

அவனுடைய முகத்தில் எல்லையற்ற அமைதி காணப்பட்டது.

போதிதர்மர் எதையும் செய்யாமலே அரசனை முழமையாக மாற்றிவட்டார்.

தற்போது நான் புரிந்து கொண்டேன். ஒவ்வொரு செயலும் அதற்கான வெகுமதியைத் தனக்குள்ளேயே கொண்டிருக்கிறது. அதேபோல் ஒவ்வொரு செயலும் தானே தண்டனையாகி விடவும் கூடும். அவரவர் விதிக்கும் அவரவரே எஜமானர். வெகுமதியோ, தண்டனையோ நம்மையன்றி வேறு எவராம் நமக்குக் கொடுக்கப் படுவதில்லை, என்று சொன்னார், வூ அரசன்.

இதைக் கேட்ட போதிதர்மர், நீ இங்கே வருவாய் என்று எனக்குத் தெரியும். நாம் போவதா, வேண்டாமா என்று இரவு முழுக்க உனக்குள் விவாதித்துக் கொண்டிருந்தாய்.

எதுவுமே இல்லாத ஒரு ஏழைத் துறவி நான். என் கைத்தடியைத் தவிர என்னிடம் வேறு என்ன இருக்கிறது? பேரரசனான நீ என்னைக் கண்டு பயந்தது எவ்வளவு கோழைத்தனம், பார், இந்தக் கம்பைக் கொண்டு உன்னுடைய மனதை நான் அமைதிப்படுத்திவிட்டேன்.

ஆனாலும், நீ ஒரு அருமையான சீடன். நான் உன்னை நேசிக்கிறேன். உன்னை மதிக்கிறேன். ஒரே அமர்வில் இந்த அளவு விழிப்புணர்வை வேறு யாரும் அடைந்திருக்க முடியாது. உன்னுடைய இருண்ட மனதில் பேரொளி பரவி விட்டிருப்பதை நான் காண்கிறேன், என்றார் போதிதர்மர்.

சீனத்தில் இருப்பது லட்சம் துறவிகள் இருந்தனர். ஆனால், அவர்களுள் நான்கு பேர்களை மட்டுமே தமது சீடர்களாக ஏற்றுக்கொண்டார் போதிதர்மர்.

தம்முடைய முதல் சீடரைக் கண்டு பிடிக்கவே ஒன்பது ஆண்டுகள் ஆயிற்று அவருக்கு. சீடரின் பெயர் ஹுய்-கோ.

தகுதியான சீடன் தம்மை வந்தடையும்வரை மக்கள் கூட்டத்தைப் பார்க்க மாட்டேன் என்று கூறியிருந்நதார் அவர். ஒன்பது ஆண்டுகளுக்கு வெற்றுச் சுவற்றையே உற்று கவனித்தபடி அமர்ந்திருந்தார் அவர்.

ஹுய்கோ வந்தார். தம்முடைய கையொன்றை வாளால் வெட்டினார். வெட்டுண்ட கையை போதிதர்மரின் முன்பாக வீசி, உங்கள் பார்வையை என் பக்கம் (சுவற்றிலிருந்து) திருப்பாவிடில், எனது தலை தங்கள் முன்னிலையில் வந்து விழும். ஆம், என்னுடைய தலையையும் நான் துண்டிக்கப் போகிறேன். என்றார். நீ தகுதியானவன்: தலையை இழக்கத் தேவையில்லை, நாம் அதைப் பயன்படுத்திக் கொள்வோம். என்றார் போதிதர்மர்.

## விக்கல் என்றால் என்ன?

34 ஆம் பக்க தொடர்ச்சி

விக்கல் எப்போதும் திடீரென்று, தன்னிச்சையாக ஏற்படும் (உடலுக்கு) அவசியமில்லாத, நம்மை மிகவும் சிரமப்படுத்தும் ஒரு நிகழ்வு என்கிறது ஆய்வு! நன்றாக வயிறு சாப்பிட்ட பின்னும், உடற்பயிற்சி அல்லது மனச்சுமை காரணமாகவும் விக்கல் வருமாம்! ஆனால், ஒவ்வொரு முறை விக்கல் வருவகற்கும் எந்தவொரு குறிப்பிட்ட காரணமும் இல்லையாம்.

ஒரு அறிவியல் கூற்றுப்படி, விக்கல் என்பது உயிர்கள் தோன்றிய காலத் தொடக்கத்தின் உறுஞ்சும் தன்மையின் எச்சமாக இருக்கும் என்கிறார்கள். மருத்துவ ஆய்வாளர்கள்! அது என்னவாக வேணும்னாலும் இருந்துட்டு போகட்டும். ஆனா, அடிப்படையில் விக்கல் என்பது ஒரு பெரிய இம்சை: என்பது உண்மைதானே?!

விக்கல் என்னவாக இருந்தா நமக்கு என்ன, அதை நிறுத்துவதற்கு நம்மிடம் ஏகப்பட்ட டெக்னிக் இருக்கே! எனக்குத் தெரிந்த ஒரு சில யுத்திகளை நான் சொல்கிறேன்....

1. சில வினாடிகள் மூச்சை நிறுத்துவது

2. திடீரென்று / எதிர்பாராதவிதமாக பயமுறுத்துவது

3. ஒரே மூச்சில் அதிக நீர் குடிப்பது

இப்படி எல்லாவிதமான யுத்திகளும் விக்கலை பெரும்பாலும் நிறுத்திவிடுமாம். ஆனா, விக்கல் எப்படி / ஏன் நின்றுபோகிறது என்று உங்களுக்குத் தெரியுமா? மேலே சொன்ன எல்லா யுத்திகளுமே சுவாசத்தைத் தற்காலிமாக சில வினாடிகள் நிறுத்திவிடுகிறதாம். அதனால்தான் விக்கல் நின்றுவிடுகிறது அப்படியென்று ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்! ஓஹோ.... அதுதானா விஷயம்?!



# பறக்கும் தட்டு


**இந்தப் பெயரைக் கேட்டால் ஒருவித அச்சமும் பிரமிப்பும் பலருக்கு ஏற்படும். பறக்கும் தட்டுக்களை தாங்கள் அவ்வப்போது பார்த்ததாக உலகெங்கும் உள்ள பலர் தெரிவித்துள்ளனர்.**

வழக்கம் போல விஞ்ஞானிகள் பறக்கும் தட்டுக்கள் இருப்பதற்கான சாத்தியங்கள் இல்லை எனவும், அவ்வாறு ஒருவேளை இருந்தாலும் ரேடார் போன்ற கருவிகள் அவற்றைத் துல்லியமாகக் கண்டுபிடித்துக் கூறி விடும் என்றும் கூறுகின்றனர். ஒரு சில ஆய்வாளர்களோ பறக்கும் தட்டுக்கள் மிக வேகமாகக் கிட்டத்தட்ட ஒளியின் அளவிற்கு வேகமாகப் பறப்பவை என்றும் அதனால்தான் ரேடாரின் கண்களுக்குச் சிக்குவதில்லை என்றும் கூறுகின்றனர்.

1960ம் ஆண்டில் அமெரிக்காவின் ஓரிகன் மாநிலத்தைச் சேர்ந்த ஒரு பகுதியில் பறக்கும் தட்டு ஒன்று இறங்கியது. அதை அப்பகுதியைச் சேர்ந்த ஒரு தம்பதியினர் பார்த்தனர். பால் ட்ரெண்ட் என்பவர் அதனை படமெடுத்தார். பத்திரிகைகளிலும் அது பற்றிய செய்திகள் வெளியானது. ஆனால் அரசு மேற்கொண்டு அது குறித்து ஆய்வுகள் ஏதும் செய்யாததால் அது பற்றிய செய்திகள் பரவவில்லை. ஆனால் அதற்கு முன்னாலேயே 1947லேயே பறக்கும் தட்டை உலகெங்கும் பலர் பரவலாகக் கண்டுள்ளனர். அது போல 1973ல் அமொக்காவின் நியூஆர்லின்ஸ் துறைமுகத்தின் பணிபுரியும் இருவர் பறக்கும் தட்டைக் கண்டனர். இரவு நேரத்தில் வேலை முடித்து அவர்கள் வீடு திரும்பும்போது பறக்கும் தட்டு அவர்கள் முன் தோன்றியது. அதிலிருந்து இறங்கிய சில உருவங்கள் அவர்கள் இருவரையும் பறக்கும் தட்டுக்குள் கொண்டு சென்று சில ஆய்வுகளைச் செய்தன. அரைகுறை மயக்கத்தில் இருந்த இருவரும் தங்களுக்கு நடப்பனவற்றை உணர முடிந்தாலும் அவர்களால் அந்த பறக்கும் தட்டு மனிதர்களை எதிர்த்து எதுவும் செய்ய முடியாத நிலை. சிலமணிநேரங்களில் அவர்களைக் கீழே தள்ளிவிட்டு பறக்கும் தட்டு சென்று விட்டது. நீண்ட நேரம் மயங்கிக் கிடந்த அவர்கள் பின்னர் மயக்கம் தெளிந்து மக்களிடம் உண்மையைச் சொன்னனர். முதலில் யாரும் அவர்களது கூற்றை நம்பவில்லை. ஆனால் மருத்துவர்கள் குழு வந்து அவர்களை ஹிப்னாடிச உறக்கத்தில் ஆழ்த்திச் சோதனை செய்தபோது அவர்கள் பொய் சொல்லவில்லை என்பதும், அமானுஷ்யமான சில அனுபவங்கள் அவர்களுக்கு ஏற்பட்டது உண்மைதான் என்பதும் தெரியவந்தது. அமெரிக்கா, கனடா, ரஷ்யா நாட்டைச் சேர்ந்தவர்கள் பல ஆண்டுகளாக பறக்கும் தட்டுகள்

குறித்து ஆய்வு நடத்தி வருகிறார்கள். எந்த அரசும் இன்றுவரை பறக்கும் தட்டுக்களையோ அல்லது அன்னியர்கள் பிரவேத்தையோ வெளிப்படையாக ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால் பிரிட்டன் மட்டும் பறக்கும் தட்டுக்கள் தொடர்பாக தாம் சேகரித்து வைத்துள்ள இரகசிய அறிக்கைகளை சமீபத்தில் வெளியிட்டது. சுமார் 6000 பக்கங்கள் கொண்ட இந்த அறிக்கை 1994 – 2000 வரையான காலப் பகுதியில் பறக்கும் தட்டுக்கள் குறித்து திரட்டப்பட்ட தகவல்களை உள்ளடக்கியிருக்கிறது. அதில் 1997ல் பிரிட்டன் கன்சவேட்டிவ் கட்சித் தலைவர் மிக்கல் கவாட்டின் இல்லத்தின் மேல் முக்கோண வடிவிலான ஒரு பறக்கும் தட்டு வந்திறங்கிய சம்பவமும் பதிவு செய்யப்பட்டுள்ளது. பறக்கும் தட்டு குறித்த தகவல்களை மேலும் மேலும் மக்களிடம் மறைப்பது பயனற்றது என்பதால் தமது சேமிப்புக்களை வெளியிட்டுள்ளதாக பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.








# பச்சை திரை தொழில்நுட்பம்

- ஒரு பார்வை

# Green Screen Technology

### பச்சை திரை தொழில்நுட்பம் (Green Screen Technology) இதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

இல்லையென்றாலும், ஆனால் கண்டிப்பாக பார்த்திருப்பீர்களா. சமீபகாலமாக ஹாலிவுட்டில் வரும் அத்தனை படங்களிலும் இதன் ஆதிக்கம் மிக அதிகம்.

பச்சை திரை தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தான், ஸ்டுடியோவில் எடுக்கப்பட்ட ஒரு வீடியோவை மலைப்பிரதேசத்தில் எடுத்ததைப் போலவும், மனிதர்கள் ஒளிப்பதிவு செய்ய சிரமமான இடங்களில் எடுத்தால் போலவும் காண்பிக்கப்படுகிறது. ஆரம்பத்தில் மிக சிரமமான ஒளிப்பதிவுகளுக்கு மட்டும் பயன்படுத்தப்பட்ட இந்த தொழில்நுட்பம், இன்று மிக எளிதான காட்சிகளுக்கெல்லாம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் காலமும் செலவும் கணிசமான அளவு மிச்சமாவது இதன் சிறப்பம்சமாகும்.


பச்சை திரையின் முன்பு ஒருவரை நிற்க வைத்து எடுக்கப்படும் வீடியோ பின்பு தனியாக எடுக்கப்பட்ட வேறு ஒரு வீடியோவில் எளிதாக சேர்க்கப்படுகிறது. இவ்வாறு எடுக்கப்படும் வீடியோக்களை மற்றவற்றுடன் இணைப்பது எளிதாக இருப்பதனால்தான் இதை பச்சை திரை தொழில்நுட்பம் என்று கூறுகிறார்கள். ஆனால் உண்மையில் இந்த தொழில்நுட்பத்தின் பெயர் ' chroma key compositing'. பச்சை தவிர நீல நிற திரையும் இதற்கு பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது.

இந்த தொழில்நுட்பம் திரைப்படத்துறை மட்டும் அல்லாது விளம்பர மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பெரும் பங்கு வகிக்கிறது. இன்று இந்த தொழில்நுட்பம் வீட்டிலேயே நமது கணினியில் கூட பயன்படுத்தும் அளவுக்கு எளிதாகிவிட்டது. இதற்காக சில பிரதான மென்பொருள்கள் (Softwares) உள்ளன. Pinnacle Studio என்பது அவற்றில் ஒன்று.

### பச்சை திரை தொழில்நுட்பத்திற்கு சில உதாரணங்கள்






## வீட்டில் இருந்தபடியே உலகின் 130 அதிசய நகரங்களைக் கண்டு களிக்க...!

Worlds Wonders என்பது கூகுள் நிறுவனத்தின் கலாச்சார மையத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய திட்டம் ஆகும். இதன் மூலம் உலகின் 130 தொன்மையான, அதிசய சுற்றுலா நகரங்களை பார்த்து ரசிக்கலாம்.

குறித்த இடங்களுக்கான Street View தொடர்பு வீடியோக்கள், புகைப்படங்கள், 3D மாடல்கள் என நிஜமான பயண அனுபவத்தையே கண்முன் கொண்டு வருகிறார்கள்.

http://www.google.com/intl/en/culturalinstitute/worldwonders/



## பெர்முடா

6 ஆம் பக்க தொடர்ச்சி....

பலவிதமான ஆராய்ச்சிகள் செய்து பார்க்கப்பட்டதில் காந்த புல மாறுதல்கள் உறுதி செய்யப்பட்டுள்ளன பூமியில் இரண்டு இடங்களில் மட்டுமே காந்த புல மாற்றம் உள்ளது ஒன்று சரியான பூமியின் வடக்கு பகுதி மற்றொன்று காந்தப்புல வடக்கு நேர் கோட்டுப்பகுதி. இந்த இடங்களில் மட்டுமே திசைகாட்டி (Compass) தவறுகிறது சக்திவாய்ந்த எலக்ட்ரானிக் சுழல்மேகங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடலினுள் மெக்சிகோவில் தொடங்கும் கல்ப்நீரோட்டம் புளொரிடா கணவாயினூடாக வட அட்லாண்டிக் வரை செல்கிறது. இதன் அகலம் 40 முதல் 50 மைல் தொலைவு பரந்துபட்டது. மேலும் இதன் வேகம் மிக அதிகம், தட்ப வெப்பநிலை மாற்றம் நிகழ்த்துவது இந்த வெப்ப நீரோட்டம். பெர்முடா முக்கோணப்பகுதியில் 28000 அடி ஆழம் கொண்ட பெரிய நீர் சுழல், 80 அடி உயர எழும்பும் பிரம்மாண்ட அலைகள் இப்பகுதியினுள் நடப்பவைகளை மறைக்கின்றன. Sattelite புகைப்படங்கள் இதை உறுதிப்படுத்துகிறது. இப்பகுதியில் நிலையற்ற காலநிலைமாற்றம் நிலவுகிறது. கரீபியன் அட்லாண்டிக் கூம்பு புயல் எப்போது வேண்டுமானாலும் சுற்றி சுழன்று வரும்.

மனித தவறுகளும் ஒரு காரணமாக சொல்லப்படுகிறது. எது எப்படியோ உலகத்தின் விடை தெரியாத மர்ம பகுதி இது. காலம்தான் பதிலளிக்க வேண்டும்.

இப்பகுதியில் மாயமானவைகளின் பட்டியல் பெரிய பட்டியலில் இருந்து சிலவற்றை மட்டுமே இங்கே குறிப்பிடுகிறேன்.

282டன் எடைகொண்ட மேரிசெலஸ்டி எனும் கப்பல் (1872)

USS சைக்ளோப்ஸ் 309 பயணிகளுடன் மாயமானது (1918 மார்ச் 4)

ராய் ஃபுக்கு மரு ஜப்பானியக்கப்பல் (1921)

டக்ளஸ் PC 3 மியாமி நோக்கி சென்றது இதில் 32 பேர் இருந்தனர் (1948 டிசம்பர் 28)

அமெரிக்கா British Airways க்கு சொந்தமான பயணிகள் விமானம் (1949)

SS மரைன் சல்பர் குயின் எண்ணெய் கப்பல் புளொரிடா வழியாக சென்றது இதில் 39 பேர் இருந்தனர். (1963 பிப்ரவரி 4)

### குறையாதது....

கூடிக்கொண்டேதான்
போகும்!
குறைவதற்கு
வாய்ப்பே இல்லை,
வயதும் விலைவாசியும்!

## E.S.P. உண்மையா?

8 ஆம் பக்க தொடர்ச்சி....

ஒருமுறை பகவான் ரமணரை கேரளாவின் புகழ் பெற்ற நாராயண குரு சந்திக்க வந்திருந்தார். இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்தனர் வெகு நேரம் ஒருவரையொருவர் பார்த்தபடி இருந்தனர். ஆனால் எதுவுமே பேசிக் கொள்ளவில்லை. பின் இறுதியாக ஆங்ஙனே ஆவட்டே என்று கூறி நாராயண குரு விடை பெற்றார். ரமணரும் தலையசைத்தார். அதன் பின்னர்தான் பக்தர்களுக்கு அவர்கள் இருவரும் பேசாமலே பேசிக்கொண்டது - தங்கள் எண்ணங்கள் மூலம் தகவல் பரிமாறிக்கொண்டது - புரிந்தது. இதைத் தான் ஆன்மப் பரிமாற்றம் என்பர். இது கூட ஒருவிதத்தில் ஈ.எஸ்.பி. யைச் சேர்ந்ததுதான். இதே போன்ற சமபவங்கள் சேஷாத்ரி சுவாமிகள், காஞ்சிப் பரியவர், யோகி ராம்சுரத்குமார், மாயம்மா என பல ஞானிகளது வாழ்வில் நிகழ்ந்துள்ளன.

உலகெங்கிலும் ஈ.எஸ்.பி. ஆற்றல் மிக்கவர்கள் பலர் உள்ளனர். லட்சக்கணகாகான மக்கள் முன் அவர்கள் தங்கள் ஈ.எஸ்.பி ஆற்றலை நிரூபித்தும் காட்டியுள்ளார்.

## காதலா?? நட்பா??

9 ஆம் பக்க தொடர்ச்சி....

இவை தவிர சமூகத்தில் இன்று காணப்படும் துர்நாற்றம் வீசும் சில களைகளை இந்த புனிதக் கண்ணோட்டத்தில் எழுத விரும்பவில்லை. சமூகத்திற்குப் புறம்பான காதல்கள், சமூக வன்முறைகளுக்கு அப்பாற்பட்ட களைகள் காதல் என்ற பெயரில் தூய்மையான இந்த காதல் அகராதிக்கு களங்கம் கற்பிக்கும் சிலரின் நடத்தைகள் என்றொழியுமோ? எங்கும் ஓர் virus இருப்பது போன்று இந்த காதலிலும் virus வந்துவிட்டது. தூய்மையான காதலினை எந்த virus ஆலும் எந்த சக்தியாலும் அழிக்கமுடியாத காதல் இம் மூன்றெழுத்து இறைவனால் உணர்வுள்ள மகோன்னத மனிதனிற்கு படைக்கப்பட்ட ஒன்று. இக் காதலினை உணர்ந்தவன் வாழ்க்கையில் பாக்கியசாலி. காதலினை எழுத்தினால் வடிக்கமுடியாது. அது உணர்ந்து பார்க்கப்பட வேண்டிய ஒன்று. பக்தியினைப் போன்று இதனை உணர்ந்தவர்களுக்கு மட்டுமே புரியும்

### சர்வாதிகாரி....

கையில் பிரம்புடன்
ஹிட்லர் பற்றி
பாடம் நடத்தினார்
ஆசிரியர்,
ஆசிரியரை விட
ஹிட்லர்
நல்லவனாகத் தெரிந்தான்
மாணவனுக்கு!

## சர்வாதிகாரி ஹிட்லர்

12 ஆம் பக்க தொடர்ச்சி....

### அங்கே அவர்கள் கண்ட காட்சி

ஒரு சோபாவில் உட்கார்ந்திருந்த நிலையில் ஹிட்லரின் உயிரற்ற உடல். அவர் காலடியில் ஒரு துப்பாக்கி கிடந்தது. அவர் சற்றுநேரத்துக்கு முன்னர் தன்னைத்தானே சுட்டுக் கொன்றதால் துப்பாக்கி முனையில் இருந்து புகை வந்து கொண்டிருந்தது. அவரின் வலது காதுக்கு கீழிருந்து இரத்தம் கொட்டிக் கொண்டு இருந்தது. ஹிட்லரின் வலது கரம் ஒரு புகைப்படத்தை மார்போடு அணைத்தபடி இருந்தது. அது ஹிட்லரின் தாயாரின் புகைப்படம். அவருடைய காதலி ஈவா வெள்ளைப் புள்ளிகளோடு கூடிய கருநீல மாக்சி உடை அணிந்து இருந்தாள். அவள் உடலில் நீலம் பாய்ந்திருந்தது. எனவே அவள் சைனட் விஷம் சாப்பிட்டிருக்க வேண்டும் என்பது புலனாகியது. இருவரது உடலையும் உதவியாளர்கள் ஒரு கம்பளிப் போர்வையில் சுற்றினார்கள். பின்னர் அந்த உடல்களை தலைமைச் செயலகத் தோட்டத்திற்குத் தூக்கிக் கொண்டு போய் எரித்தார்கள். சிலமணி நேரத்தில் அங்கு வந்த ரஷ்யப் படைகள் ஹிட்லரை காணாமல் திகைத்துப் போனார்கள்.

ஹிட்லர் ஈவு இரக்கம் அற்ற கொடியவராக இருந்தாலும் சில நல்ல குணங்களும் இருந்தன. ஹிட்லர் குழந்தைகளிடமும் மிருகங்களிடமும் அன்பு கொண்டவர். மாமிசம் சாப்பிட மாட்டார். புகை பிடிக்கமாட்டார்.


பிணமாக ஹிட்லர்






# O/L , A/L தகுதியோடு

# British Qualified

## Chartered Engineer

### ஆவதற்கு **Apss International** இல் இணைந்து கொள்ளுங்கள்



**APSS 2003/2004** ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக ஏதாவது ஒரு துறையில் **World Gold Medal** பெறத் தவறுவதில்லை. இம்முறை மின்னியல் இலத்திரனியலில் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழக பட்டதாரிகள், தொழில்நுட்பவியலாளர்கள் **CITY & GUILDS** பரீட்சையினூடு குறுகியகாலத்தில் **CHARTERED ENGINEER** ஆகும் அரிய வாய்ப்பு.

**DECEMBER 2012 / JUNE 2013**
பரீட்சைக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

Chartered Engineer
**Post Graduate Diploma**
↑
Incorporated Engineer
**Graduate Diploma**
↑
Engineering Technician
**Advanced Diploma**
↑
**Diploma**

**செய்முறைப் பயிற்சிகள் பல்கலைக்கழக உதவியுடன் நடாத்தப்படுகின்றன.**

**Hotline: 077 2306642 | 072 2306642 | 077 3867695**

## City & Guilds Engineering Programmes @ APSS

- Civil Engineerng
- Quantity Surveying
- Mechanical Engineering
- Electrical and Electronic
- Telecommunication Systems
- Motor Vehicle Engineering

City & Guilds

**APSS INTERNATIONAL**
Networks (Pvt) Limited

**Course Director / Lecturer: Prof.K. Chandirabose**

No: 35, Nelson Place, Colombo 06. Tel: 011 2 2361587

# ஒரு காதலன் காதலியிடம் கேட்க நினைத்து ஆனால் கேட்க முடியாது போன சுவாரசியமான கேள்விகள்....

நாங்கள் உங்களுக்கு ரீ-சார்ஜ் பண்ணி அனுப்புறோம் ஆனாலும் நீங்க எதுக்கு மிஸ்டு கால் கொடுத்தே எங்க உயிரை வாங்குறீங்க? உங்ககிட்ட ஃபோன்ல பேசின காசையெல்லாம் சேர்த்த வெச்சிருந்தா, நான் லோன் போட்டு பைக் வாங்கி இருக்க வேண்டிய அவசியமே இருந்திருக்காது.

ஒரு பொண்ணு கொடுக்கிற மிஸ் காலை மட்டும் யாராலும் அட்டெண்ட் பண்ணவே முடியாது. அவ்வளவு ஷார்ப்பா கட் பண்ணுவாங்க. இப்படி மிஸ்டுகால் கொடுக்க நீங்க எந்த யுனிவர்சிட்டியில ட்ரெயினிங் எடுத்துகிட்டிங்க?

அது ஏன் எப்போ பார்த்தாலும், எது கேட்டாலும் ஹி... ஹி ன்னு சிரிச்சிகிட்டே இருக்கீங்க? ஒரு மணி நேரம் உங்ககிட்ட ஃபோன்ல பேசினா அதுல நாற்பது நிமிஷம் கேனத்தனமா சிரிச்சுகிட்டேதான் இருக்கீங்க. ஏன் ஏதாவது பேஸ்ட் விளம்பரத்துல நடிக்கிறதுக்கு ஏங்ககிட்ட ட்ரெயினிங் எடுக்கிறீங்களா?

ஃபோன்ல நாங்களேதான் பேசிகிட்டு இருக்கோம். எதைக்கேட்டாலும் நீங்க சொல்லுங்க, நீங்க சொல்லுங்க ன்னா நாங்க என்னத்தை சொல்லி தொலைக்கிறது? உங்களுக்கு எதையுமே பேசத்தெரியாது போலன்னு நினைச்சு நாங்க பாட்டுக்குஎதையாவது சொல்லி தொலைச்சுடுவோம். அதையே மனசுல வெச்சிகிட்டு, கல்யாணத்துக்கு அப்புறம் வாங்கி கட்டிக்கிறதுஎங்களுக்கு மட்டும்தான் தெரியும். அது எப்படி பேசவே தெரியாத மாதிரி சீன் போடுறீங்க?

மெசேஜ்ல மட்டும் ரொம்ப ரொமாண்டிக்கா SMS அனுப்பி எங்க தூக்கத்தை கெடுக்குறீங்க. ஆனா அதையே நேர்ல சொல்ல சொன்னா மட்டும் வெட்கத்தையே என்னமோ நீங்கதான் குத்தகைக்கு எடுத்த மாதிரி வெட்கப்படுறீங்க? இது எப்படி உங்களால் மட்டும் முடியுது? மெசேஜ் அனுப்பும் போதெல்லாம் உங்க வெட்கத்தை என்ன ஃப்ரிட்ஜ்க்கு உள்ளே ஒளிச்சி வெச்சிடுவீங்களா?

ஹேய்.. உனக்கு எப்படி அது தெரியும்? அப்படிங்கிற கேள்வியை மட்டும் கேட்டுட்டா போதும். உடனே நான் உங்க இதயத்துல தானே இருக்கேன். இது கூட எனக்கு தெரியாதான்னு உடனே ஒரு டயலாக் விடுவீங்க. இந்த மாதிரி எல்லாம் டயலாக் விட டைரக்டர் கதிர்கிட்ட கத்துகிட்டீங்களா என்ன?

Loss of Pay ல லீவு போட்டுட்டு, உங்களை பைக்ல தியேட்டருக்கு கூட்டிட்டு போனா, அப்பத்தான் ரொம்ப கவனமா ஹேண்ட் பேகை எடுத்து நம்ம ரெண்டு பேருக்கு நடுவுல வெச்சுகிட்டு வருவீங்க. என்ன கொடுமை சார் இதெல்லாம்?

அப்புறம் அப்புறம் ங்கிற மொக்கையவே அரை மணி நேரமா போடுறீங்க. சரி வெச்சுடுறேன்னு ஃபோனை கட் பண்ண போகும்போதுதான் என் கூட பேசறது உங்களுக்கு போரடிக்குதா ன்னு ஒரு சென்டிமென் சீன் ஓபன் பண்ண வேண்டியது. உங்களுக்கு ஏன் இந்த கொலைவெறி?

நீங்க கிஃப்ட் கொடுத்தா மட்டும் விலையைப் பார்க்க கூடாது. அதுல உங்க அன்பைத்தான் பார்க்கணும். ஏன்னா நிச்சயமா அந்த கிஃப்ட் கீ-செயினாவோ, கர்ச்சீஃபாவோ இல்லை அதிகபட்சமா மணிபர்ஸாவோதான் இருக்கும். ஏன்னா அதுங்கதான் ஐம்பது ரூபாய்க்கு கிடைக்கும். ஆனா இதே நாங்க கிஃப்ட் கொடுக்கும் போது மட்டும் சுடிதாரோ செல்ஃபோனோ தங்க செயினோ, வெள்ளி கொலுசோ, குறைஞ்சது 3,000ஃ- ரூபாய்க்கு செலவு பண்ணாதான் நாங்க உங்க மேல உண்மையான அன்பு வெச்சிருக்கிறதா அர்த்தம். என்ன கரெக்ட்டா? உங்க அன்போட அளவுகோலுக்கு எல்லையே கிடையாதா?

உன் நியாபகமாவே இருந்துச்சு ராத்திரி எல்லாம் தூக்கமே வரலை ன்னு மனசாட்சி இல்லாம பொய் சொல்றீங்களே.. என் நியாபகமாவே இருந்துச்சின்னா என் கூட பேச வேண்டியது தானே. இந்தக் கேள்வியை நாங்க கேட்டுடக் கூடாதுனு அர்த்த ராத்திரில போய் முழிச்சுகிட்டு இருக்கிற நேரத்துல, ஒரு மிஸ்டுகால் கொடுத்துட்டு, மறுநாள் காலையில உனக்கு என் நியாபகமே இல்லைன்னே சண்டை போட வேண்டியது. இந்த விஷயத்துல சத்தியமா உங்களை அடிச்சுக்க ஆளே கிடையாது.

நீங்க யூஸ்பண்ணி தூக்கி போட்ட பொருளை எல்லாம் நாங்க சேர்த்து வெச்சிருக்கணும்னு எதிர்பார்க்குறீங்களே, நாங்க என்ன நீங்க தூக்கி போடுறதை எல்லாம் சேர்த்து பெக்கிற குப்பை தொட்டியா?

நண்பர்களே இந்தக் கேள்விகளை எல்லாம் படிக்கிதோட நிறுத்திக்குங்க. தப்பித்தவறி கூட இந்தக் கேள்விகளை நீங்க உங்க காதலிகிட்ட கேட்டீங்கன்னு வெச்சுக்குங்களேன்......
ஹாஹாஹாஹாஹாஹா நான் சொல்ல மாட்டேனே



www.ataaspirations.com

# Study & Work in

## UK, Ireland, Singapore

**IELTS 4.0 போதுமானது**





**TIER 4 (Child Student)**

**IELTS இன்றி**

தமது பெற்றோரையும்
தம்முடன் அழைத்துச் செல்வதற்கு

**16 வயதிற்குட்பட்ட**
**மாணவர்களுக்கான**
**அரிய வாய்ப்பு**

Minimum Qualification O/Level

Free Airport pickup

Accomodation arragement

Free visa extension advice

20 working hours per week

தனது Dependants ஐ தம்முடன்
கூட்டிச் செல்லும் வாய்ப்பு

**ATA Aspirations (Pvt) Ltd**

No. 122/B, Galle Road, Dehiwala South, Colombo.

Tel: 0776 874576 / 0775 016757 / 0112 722990


Web: www.ataaspirations.com
உங்களின் தெரிவு
நாங்கள் என்பது
எங்களின் சேவையில்
உங்களின் திருப்தி
ATA Travels & Tours
No. 122/B, Galle Road, Dehiwala South, Colombo, Sri Lanka.
Tel: 011 272 2990 Hotline: 077 687 4576 , 077 501 6757
Email: info@ataaspirations.com